RECEIVED 1980-3-10 PERIODICALS DIVISION UNIVERSITY OF ... CAMPUS LIBRARY

ஈழநாடு
The EELANAADU
50 சதம்

மலர் 22 மாசி 27 ரபி-ஆகி 22 இதழ் 29
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 10-3-80

## "சகல துறையினருக்கும் ரூ.300 அலவன்ஸ்வேண்டும்"

(கொழும்பு)

சகல துறைகளையும் சார்ந்த ஊழியர்களுக்கும் நிவாரண அலவன்ஸாக ரூபா 300 வழங்கவேண்டும் என்று அரசை வலியுறுத்த வேண்டுமென்றுநேற்று நடைபெற்ற எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த 17 தொழிற் சங்க சம்மேளத்தின் பேராளர் மகாநாட்டில் ஏகோபித்த முடிவு எடுக்கப்பட்டது.

சுகததாசா உள்ளரங்கில் நடைபெற்ற இம்மாநாட்டில் வாழ்கைச் செலவைக்குறைக்க அரசாங்கம் உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், தொழிற்சங்கங்களை நசுக்கும் சட்டமூலங்களை வாபஸ் பெறவேண்டும் என்றும் அரசைக் கோருவதென்றும் அங்கு முடிவு செய்யப்பட்டது. (ப-ந)

★ வடமாகாண அதிபர்கள் சங்கம் ஒருமனதாகத் தீர்மானம்

# "சம்பளப் பணத்தைப் பெற வங்கிகளுக்குச் செல்வதில்லை!"

## அடுத்தமாதம் முதல் அமுல் செய்ய முடிவு!

[யாழ்ப்பாணம்]

**அடுத்த மாதம் தொடக்கம் ஆசிரியர்களின் சம்பளப்பணத்தைப் பெறுவதற்கு வங்கிகளுக்கு செல்வதில்லை என்று வடமாகாண அதிபர்கள் சங்கம் ஏகமனதாக தீர்மானித்துள்ளது.**

வடமாகாண பாடசாலை அதிபர்களின் சங்கக் கூட்டம், யாழ் மத்திய கல்லூரியில் அதிபர்கள் சங்கத் தலைவர் திரு. ஏ. நடராசா தலைமையில் நேற்று நடைபெற்றது.

இத் தீர்மானத்தை வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. மாணிக்கவாசகருக்கு அனுப்பிவைப்பதென்று கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டு, உடனடியாக அது அனுப்பி வைக்கப்பட்டது.

இதுதொடர்பாகஅதிபர்கள் சங்கச் செயலாளர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: "சம்பளப்பணத்தை அதிபர்கள் பெற்றுக்கொள்ள வங்கிகளுக்குச் செல்லும்போது தனியே செல்வதில்லை. சக ஆசிரியர்களையும் வங்கிக்கு அழைத்துச் சென்று பணம் பெறுவதற்காக பலமணிநேரம்வரை வங்கியில் காத்து நிற்கிறார்கள். பாடசாலைப் பிள்ளைகளுக்கு கல்வி கற்பிக்கவேண்டியநேரத்தில் அதிபர்களும் ஆசிரியர்களும் வங்கியில் இவ்விதமாக நிற்பதால் பிள்ளைகளின் கல்வி வெகுவாகப் பாதிக்கப்படுகிறது.

"இதுவரை இலங்கையில் பல பாடசாலை ஆசிரியர்களின் சம்பளப்பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. சாவகச்சேரி இந்துக்கல்லூரி ஆசிரியர்களின் சம்பளப் பணத்தை மேற்படி கல்லூரி அதிபரும் ஆசிரியர்களும் வங்கியில் இருந்துகொண்டுவரும் வேளை ஆயுதம் தாங்கிய கோஷ்டியொன்று சம்பளப் பணம்கொண்டு சென்ற காருக்கு துப்பாக்கிப்பிரயோகம்செய்து ஆசிரியர்களின் சம்பளப் பணத்தையும் கொள்ளையடித்ததுடன் அதிபருக்கு காயமும் விளைவிக்கப்பட்டது. இப்படிப்பட்ட ஜீவ மரணப் போராட்டத்தின் மத்தியில் தான் அதிபர்கள் ஆசிரியர்களின் சம்பளப் பணத்தை வங்கியிலிருந்து கொண்டுவருகிறார்கள். சாவகச்சேரி இந்துக்கல்லூரி அதிபருக்கு நேர்ந்தகதி, வேறு எந்த அதிபருக்கும் நடப்பதை அதிபர்கள் சங்கம் சும்மா பார்த்துக்கொண்டிருக்க விரும்பவில்லை. சம்பளப்பணத்தை காசோலையாகவோ அல்லது காசுக் கட்டளை மூலமாகவோ ஒவ்வொரு ஆசிரியருக்கும் வழங்க சம்பந்தப்பட்ட திணைக்களம் முன்வரவேண்டும். காசோலையாகவோ அன்றிக் காசுக்கட்டளையாகவோ அனுப்ப சம்பந்தப்பட்ட திணைக்களம் விரும்பாவிட்டால், ஆசிரியர்களை வங்கிக் கணக்கு திறக்கச்செய்து நேரடியாக ஆசிரியர்களின் வங்கிக்கணக்கில் அவர்களின் சம்பளப்பணத்தை வைப்பில் இடுவதற்கு சம்பந்தப்பட்ட திணைக்களம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

"இது விடயமாக அதிபர்கள் கடந்த இரண்டு வருடமாகத் தனித்தனியாகவும், கூட்டமாகவும் சம்பந்தப்பட்ட திணைக்களத்திற்கு அறிவித்தும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதிபர்களினதும் ஆசிரியர்களினதும் ஜீவ மரணப் பேராட்டத்தை சம்பந்தப்பட்ட திணைக்களம் கவனத்திற் கொள்ளாததாலேயே அதிபர்களும், ஆசிரியர்களும் எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதல் சம்பளப் பணத்தை பெறுவதற்கு வங்கிக்குச் செல்வதில்லை என்று தீர்மானித்துள்ளது.


"சம்பளப் பணத்தைப்பெற அதிபர்களும், ஆசிரியர்களும் வங்கிக்குச் செல்வதால் மாணவர்களின் கல்வி பாதிப்படைவதை ஒவ்வொரு பெற்றோரும் மாணவர்களும் உணர்ந்து அவர்களும் அதிபர்கள் சங்கத்திற்கு ஒத்துழைப்பு நல்கவேண்டும் என்று அதிபர்கள் சங்க அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கொ)

### கச்சதீவு யாத்திரிகர்களுடன் கடலில் தத்தளித்த வள்ளம் கடற்படையினால் மீட்பு?

(தலைமன்னார்)

கச்சதீவு சென்ற யாத்திரிகர்களுடன் நடுக்கடலில் தத்தளித்த படகு ஒன்று கடற்படையினரின் தீவிர முயற்சினால் காப்பாற்றப்பட்டது.

தலைமன்னாரிலிருந்து கச்சதீவு யாத்திரிகர்களுடன் புறப்பட்ட இவ்வள்ளம் இயந்திரக் கோளாறு காரணமாக நடுக்கடலில் நீண்ட நேரமாகத் தத்தளித்துக் கொண்டிருந்ததாகவும் பின்னர் அவ்வள்ளத்தைக் காப்பாற்றிய கடற்படையினர் அதனைத் தலைமன்னார் கரைக்கு இழுத்து வந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ)



யாழ்ப்பாணம்-கொழும்பு 'கே. ஜி. எக்ஸ்பிரெஸ்' பஸ் சேவையை யாழ். மேயர் திரு. இராசா விஸ்வநாதன், மானிப்பாய் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் ஆகியோர் கடந்த வாரம் ஆரம்பித்துவைத்தனர். இச்சேவை தினமும் இரவுவேளைகளில் நடைபெற்றுவருகிறது.

### கைதடி சிறுவர் இல்ல கொடிநாள் விழா இன்று

(யாழ்ப்பாணம்)

கைதடி சைவச்சிறுவர் இல்ல வருடாந்தக் கொடிவிழா, இன்று காலை சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ். மேலதிக மாவட்ட நீதவான் திரு. க. ஞானச்சந்திரன் சைவக் கொடியை ஏற்றிவைப்பதுடன் விழா ஆரம்பமாகும். இல்லத் தலைவர் திரு. வே. முத்துக்குமாரசுவாமி வரவேற்புரையாற்றுவார். எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கத்தின் ஆசியுரையையடுத்து யாழ். அரசாங்க அதிபர் திரு. யோகேந்திராதுரைசாமி ஆரம்பவுரையாற்றுவார். ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம், சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் திரு. ச. துரைராசா உட்பட பலர் ஆசியுரையாற்றுவர்.

பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரை யாழ். அரச அதிபர் திரு. யோகேந்திரா துரைசுவாமி, எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் ஆகியோர் விழா சிறப்புரை தமது வாழ்த்துச் செய்திகளையும் அனுப்பிள்ளனர். (கு)

### 500ரூபா முற்பணம்வழங்க கோரிக்கை

(கொழும்பு)

விலைவாசி அதிகரிப்பைக் கருத்தில் கொண்டு அரச ஊழியருக்கு வழங்கப்படும் பண்டிகை முற்பணத்தையும் அதிகரிக்க வேண்டும் என்று அரசாங்கஎழுதுவினைஞர்சங்கம் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவைக் கேட்டுள்ளது.

தற்போது வழங்கப்படும் இருநூறு ரூபாவை 500 ரூபாவாக அதிகரிக்க வேண்டும் என்றும் எதிர்வரும் புதுவருடத்தில் அதனைவழங்க நடவடிக்கை எடுக்குமாறும் இது தொடர்பாக எதியுள்ள கடிதத்தில் அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் கேட்டுள்ளது. (ம-கு)

### கச்சதீவு சென்ற படகு: நடுக்கடலில் சோதனைநடந்து கரைக்குத் திருப்பப்பட்டது!

(யாழ்ப்பாணம்)

கச்சதீவிற்குச் சென்ற படகொன்று நடுக்கடலில் சோதனையிடப்பட்டபோது, அப்படகிலிருந்து சாராயப்போத்தல்களும், தேங்காங் எண்ணைத் தகரங்களும் பதுக்கி வைத்திருப்பது கண்டு பிடிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்திலிருந்து கச்தீவுக்கு யாத்திரிகர்களை ஏற்றிச் சென்ற படகொன்றை நடுக்கடலில் வைத்துச் சோதனைசெய்த கடற்படை அதிகாரிகள் படகில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 90 கலன் தேங்காய் எண்ணைத் தகரங்களையும், 14 சாராயப் போத்தல்களையும் கண்டுபிடித்தனர். அதைத் தொடர்ந்து அப்படகு கரை திருப்பப்பட்டு சுங்க இலாகாவிடம் ஒப்படைக்கப்பட்டது.

கடத்தல் சம்பந்தமாக சுங்கப்பகுதியினர் படகோட்டியை விசாரணைக்குட்படுத்தியுள்ளனர். (கொ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## தேவை

யாழ்ப்பாணத்தில் ஓர் பிரபல ஸ்தாபனத்திற்கு, வான் மூலம் பொருட்கள் விற்பனை செய்யக் கூடிய ஆற்றல் வாய்ந்த விற்பனையாளர் தேவை. விற்பனை சம்பந்தமான அறிவாற்றல், மூன்று வருட அனுபவத்துடன் கூடியவர்கள் சான்றிதழ்களுடன் 15-3-80-க்கு முன்னர் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 5160 C/o. ஈழநாடு லிமிட். யாழ்ப்பாணம். 5160

மறைன் டீசல் என்ஜின் மெக்கானிக்மார் குறைந்தது. தனியாக என்ஜின் கழட்டி பூட்டும் ஆற்றல் உள்ளவர்களாகவும் 18-க்கும் 30-க்கும் இடைப்பட்ட வயதினராகவும் இருக்கவேண்டும். திறமைக்கு முதலிடமும் அரசாங்க விகிதப்படி சம்பளமும் வழங்கப்படும் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 5172, C/o ஈழநாடு. யாழ்ப்பாணம். 5172

மறைன் டீசல் என்ஜின் வேலை பழகுனர்கள் தேவை. வயது 16-க்கும் 20 க்கும் இடைப்பட்டவர்களாகவும் குறைந்தது எட்டாம் வகுப்பு வரை படித்தவர்களாகவும் இருக்கவேண்டும். அரசாங்க விகிதப்படி சம்பளம் வழங்கப்படும் விண்ணப்பிக்கவும்: விளம்பர இல. 5173 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 5173

பலசரக்கு வியாபாரத்தில் அனுபவம் உள்ள சேல்ஸ்மன் தேவை. தொடர்புகொள்ளவும். 18, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம். 5179

அனுபவமுள்ள லொறிச் சாரதி தேவை. நற்சாட்சிப்பத்திரங்களுடன் நேரில் மனுச் செய்க அரஸ்கோ இன்டஸ்றீஸ், 163, கண்டிவீதி, யாழ்ப்பாணம். 5186

## விற்பனைக்கு

34 ஸ்ரீ 2000 தொடர் இலக்க டொயோட்டா ஹையேஸ் (Toyota Hiace) வேன் காட்சி அறை நிலையில் விற்பனைக்குண்டு. 88/1, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 5184

ஒறிஜினல் திண்டுக்கல் இரும்புப் பெட்டியும், ஜேர்மன் இரும்புப்பெட்டியும். நேரில் பார்வையிடலாம். பெஞ்சி ஜுவலர்ஸ், 74/1, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம். 5191

ரைச்சிப்பகுதிகண்டாவளையில் 35ஏக்கர்வயல் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: அ. பொ. சின்னத்தம்பி, மி. சொந்தக்காரர், கண்டாவளை 5190

வசாவிளானில் ஆறரைப் பரப்பு விவசாயக்காணியும், நான்குபரப்பு கல்வீடு வளவும் தனித்தனி / சேர்ந்து விற்பனைக்குண்டு. 14-3-80 வரை ஆவரங்கால் உபதபாற்கந்தோர் அருகாமையிலுள்ள கி. அருளம்பலம் என்பவருடைய கடையில் 2-00 மணி வரை தொடர்பு கொள்ளவும். 5187

## வகுப்புகள்

G. C. E. சாதாரண வகுப்பு ஆங்கில இலக்கண இலக்கியம் (English Literature) ஆங்கிலப் பேச்சு (Spoken English) தனிப்பட்ட முறையாயும், வீடுகள் சென்றும் கற்றுக் கொடுக்கப்படும். தொடர்பு: விளம்பர இல:5164, மே/பா, ஈழநாடு, யாழ்ப்பாணம். 5164

## CLASSES

P. M. G's certificate (special) Radio officers exam. Sept/Oct. 80. Classes start on 22-3-80 above examination. Rajaratnam, Bond Institute, Hospital Road, Jaffna. 5153

# அறிவித்தல்

யாழ்ப்பாண
மாவட்ட நீதிமன்றம்,

மரணசாதனமின்றி மரணித்த கொக்குவில் கிழக்கு சுந்தரம் பரமேஸ்வரனின் ஆதனங்களும் மற்றும் பெறுமதிகளும் சம்பந்தப்பட்ட விடயத்தில்,

சுந்தரம் பரமேஸ்வரன் கைம்பெண் புவனராணி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

மனுதார்

இல. தத்துவம்: 3505

எதிர்

1. பரமேஸ்வரன் மகள் நளினி. (பராயமற்றவர்)
2. பரமேஸ்வரன் மகள் பராசினி இருவரும் கொக்குவில் கிழக்கு. கொக்குவில். (பராயமற்றவர்)
3. சுந்தரம் பூதப்பிள்ளை, கொக்கன், காங்கேசன்துறை பராயமற்ற 1-ம், 2-ம் எதிர்வாதிகளின் வழக்குப் பாதுகாவலர்.

எதிர்வாதிகள்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதனவழக்கு மேலேபெயர்குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிர்ணயிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப்பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1980-ம் ஆண்டு மாசி மாதம் 29-ம் நாளன்று முற்பகல் 10-00 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றானதாக்கப்படலாகாதென்பதற்குக் காரண காட்டுமாறு இத்தால்தேவைபடுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி
ஒப்பம்
**பொ. பாக்கியநாதன்,**
பதிவாளர்.

மேற்படி காலம் 2-5-80 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

ஒப்பம்
**பொ. பாக்கியநாத**
பதிவாளர்.

வரைவு:
**இ. சிவசுப்பிரமணியம்**
மனுதாரின் சட்டத்தரணி.
5132

## மேலும் ஒரு அம்புலன்ஸ்

[மன்னார்]

மன்னார் அரசாங்க வைத்திசாலைக்கு மேலும் ஒரு அம்புலன்ஸ் வண்டி வழங்கப்பட்டுள்ளது. இதனால் இப்போது இரண்டு அம்புலன்ஸ் வண்டிகள் சேவையிலீடுபடுத்தப்பட்டுள்ளது.

......

## நிர்வாகிகள்

[மன்னார்]

தலைமன்னார் இ. தொ. கா. வருடாந்தப் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

புது வருட நிர்வாகிகளின் விபரம் வருமாறு: தலைவர்: ஜனாப். ஏ எச். ஜபார் சாதிக், உபதலைவர்: எம். பாஞ் சிபீர், செயலாளர்: ஜனாப். சருதீன், துணைச்செயலாளர்: திரு. பாலசுப்பிரமணியம், தனாதிகாரி: எஸ். சந்தோஷம் 11 பேர் கொண்ட செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது

## சகல மாவட்டங்களிலும் காணிக்கச்சேரி

(கொழும்பு)

நிலமற்ற ஏழைகளுக்கு அரசாங்கக் காணிகளைப் பகிர்ந்தளிப்பதற்காக அடுத்தமாதம் சகல மாவட்டங்களிலும் காணிக்கச்சேரிகள் நடத்தப்படவுள்ளது.

அரசகாணிகளில் அத்துமீறிய குடியேற்றம், சட்டவிரோத காணிசுவீகரிப்பு ஆகிய பிரச்னைகள் இக்காணிக்கச்சேரிகளை நடத்துவதன் மூலம் தீர்த்துவைக்கப்படும் என்று அரசாங்க அதிகாரி ஒருவர் கூறினார்.

இவ்வாண்டு 2 லட்சம் நிலமற்ற ஏழைகளை அரச காணிகளில் குடியமர்த்துவதென்று அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

......

## பாடசாலைக்கட்டிடம்

[மன்னார்]

தலைமன்னார் லோறன்ஸ் வீதி வித்தியாலயத்திற்கு பத்தாயிரம் ரூபா செலவில் பாடசாலைக்கட்டிடம் ஒன்றை நிறுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளபட்டு வருகின்றன.

தலைமன்னார் பங்குத் தந்தை அருட்திரு. பி. அலோசியஸின் வேண்டுகோளுக்கு இணங்க தலைமன்னார் கிராம மக்களால் இக்கட்டிடம் நிறுவப்பட்டுள்ளது.

......

## ஹிஜ்ரி விழா

[மன்னார்]

மன்னாரில் ஹிஜ்ரி விழா இம்மாதம் 17ம் திகதி நடைபெறும்.

மன்னார் அல் - அஸ்ஹர் மகாவித்தியாலயத்தில் மூதூர் எம், பி. யும் மன்னார் மாவட்ட அமைச்சருமான ஜனாப். எம். ஈ. எச். மஹ்ரூப் தலைமையில் நடைபெறும். ஹிஜ்ரி விழாக் கூட்டத்தில் தேசிய ஹிஜ்ரி

## வட்டுக்கோட்டை கிராமசபை கேள்வி விளம்பரம்

பல கூறுள்ள கடைச்கட்டிடங்கள் அமைப்பதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் பதிவுத்தபால் மூலம் 27-03-80-ந் திகதி முற்பகல் 10 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் ரூபா 200,000/-க்கு மேல் அரசாங்க நிறுவனங்களுடன் அல்லது வேறு உள்ளூராட்சி மன்றங்களுடன் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களுக்கு மட்டுமே வழங்கப்படும்.

கேள்விப் பிணைப்பணம் ரூபா 500/-ம், மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக்கட்டணமாக ரூபா 100/-ம 25-03-80-ந் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னர் இவ்வலுவலகத்தில் செலுத்திக் கேள்விப்பத்திரங்களின் இரு பிரதிகள் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப் பத்திரத்தின் ஒரு பிரதி இவ்வலுவலகத்திற்கும் மறு பிரதி யாழ்ப்பாணம் உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கும் அனுப்பப்படல் வேண்டும். மேலதிக விபரங்களை இவ்வலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

**மு. சுப்பிரமணியம்,**
நிர்வாகத்தர்,
வட்டுக்கோட்டை
கிராமசபை.

கிராமசபை அலுவலகம்,
வட்டுக்கோட்டை,
05-03-80. (5176)

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

# நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

வழக்கு இல. ஈடு/2273

1. சூசைப்பிள்ளை அந்தோனிமுத்து செல்வராசாவும்
2. பெண் மேரி ஹூதுமலரும், இருவரும் மாதகல்

வழக்காளிகள்

எதிராக

1. சூசைப்பிள்ளை அந்தோனிப்பிள்ளையும்
2. பெண் பிலோமினா, இருவரும் மாதகல்.

எதிராளிகள்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் எனக்குக் கிடைத்த நீதிமன்றக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஆதனம் 1980-ம் ஆண்டு பங்குனி மாதம் 28-ந் திகதி (28-3-1980) வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

## தீர்வைத் தொகை

மேற்குறித்த எதிராளிகள் மேற்படி வழக்காளிகளுக்கு ரூபா 4000/-மும் வழக்குச் செலவு ரூ 498-95 சதமும் கொடுக்க வேண்டி உள்ளது. இதில் 2-1-1980ல் ரூபா 500/- கொடுபட்டுள்ளது.

## குறித்த ஆதனடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்கு பண்டத்தரிப்பு கோவிற்பற்று மாதகல் இறை நம நாச்சியார் தோட்டமும், இராமாவத்தையும் காரையார் தோட்டமும் பூக்கொட்டிக் கிளானையும் தலை தூக்கியும். பர. நில. இல இரண்டு (2) எல்லை கிழக்கு கவிரிகேற்பிள்ளை யேசுநாயகத்துக்குரிய காணி, வடக்கு விசுவர் செல்லருக்குரிய காணி, மேற்கு சந்தியாபிள்ளை அந்தோனி குருசவுக்குரிய காணி, தெற்கு ஒழுங்கை இதடங்கலும் இன்னும் கிழக்கெல்லைக் காணியின் தெற்கு அருகால் மூன்று அடி அகல கையொழுங்கை பாவிப்புரித்தும். பதிவு E 394/86.

**சி. ஆ. த. வடிவேலு ஜே. பி.,**
நீதிமன்ற விற்பனவு ஆணையாளரும்,
விலைமதிப்டாளரும்

"வடிவேல் உதயம்",
காங்கேசன்துறை வீதி,
கோண்டாவில்,
10-1-1980. 5171

# நன்றி நவிலல்

## திருமதி மனோன்மணி அமிர்தலிங்கம்

21-2-80ல் மரணமான காலஞ்சென்ற திரு. எஸ். அமிர்தலிங்கத்தின் (பிற்ற—றட—மலி தோட்டம், அப்புத்தளை) மனைவி திருமதி மனோன்மணியின் மரணச் சடங்குகளில் கலந்துகொண்டவர்களுக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும் மற்றும் பல வழிகளிலும் எமக்கு உதவி ஒத்தாசை புரிந்தவர்களுக்கும் எமது நன்றிகள். தனித்தனியே நன்றி கூற முடியாமைக்கு வருந்துகிறோம்.

பிள்ளைகள்,
டாக்டர் வேலும் மயிலும் வளவு,
63, பலாலி வீதி,
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம்.
5188

# கே. ஜி. எக்ஸ்பிரெஸ் பஸ் சேவை

சாயக்கூடிய, வசதியான, ஆடம்பரமான பஸ்கள் தினசரி கீழ்க்கண்ட இடங்களிலிருந்து புறப்படும்:

## கொழும்பு / யாழ்ப்பாணம்

வெள்ளவத்தை மாணிக்க விநாயகர் கோவிலடி
லோரன்ஸ் ரோட் — இரவு 7-30 மணி
கோட்டை புகையிரத நிலையம் — இரவு 8-00 மணி

## யாழ்ப்பாணம் / கொழும்பு

வெலிங்டன் தியேட்டர், யாழ்ப்பாணம் இரவு 8-00 மணி

முன்பதிவு செய்யும் இடங்கள்:

இராஜேஸ்வரி ஹோட்டல்,
69, நொறிஸ் றோட், கோட்டை.
தொலைபேசி: 25939 பிற்பகல் 2-00 மணிமுதல் இரவு 7-00 மணிவரை

பிளாசா தியேட்டர், வெள்ளவத்தை.
தொலைபேசி: 88070 பிற்பகல் 1-30 மணிமுதல் இரவு 10-00 மணிவரை

காமினி தியேட்டர், மருதானை.
தொலைபேசி: 93810 காலை 9-00 மணிமுதல் இரவு 10-00 மணிவரை

வெலிங்டன் தியேட்டர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 559 காலை 8-00 மணிமுதல் இரவு 10-00 மணிவரை

**கட்டணம் ரூ. 50/- (ஒரு வழி மட்டும்)**

பயணம் செய்யும் போது பணத்தை உங்களுடன் எடுத்துச் செல்லவேண்டியதில்லை. கீழ் குறிப்பிட்ட இடங்களில் உங்கள் பணத்தை ஒப்படைக்கவோ பெற்றுக் கொள்ளவோ முடியும்.

★ பிளாஸா தியேட்டரில் ரூபா 1000/-க்கு உட்பட்ட தொகை ஒப்படைக்கவோ அல்லதுபெற்றுக் கொள்ளவோ முடியும்

கே. ஜி. இன்டஸ்ரீஸ்,
ஸ்ரீ சங்கராஜமாவத்தை,
கொழும்பு.
வெலிங்டன் தியேட்டர்,
யாழ்ப்பாணம்.

எத்தொகையும்
ஒப்படைக்கவோ
பெற்றுக்கொள்ளவோ
முடியும்

★ காலை 6 மணிக்கு பஸ்கள் கொழும்பு/யாழ்ப்பாணம் சென்றடையும். 5133

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

உழைக்காமல் உண்டு கொண்டிருப்பவன் பிறரிடமிருந்து, களவாடப்பட்ட உணவையே உண்கிறான்.

—மகாத்மா காந்தி

# 'கார்டினல்' விதைகிழங்குக்கு வடக்கில் நல்லகிராக்கி!

## வுல்ஃப் அன் வுல்ஃப் ஸ்தாபன பிரதிநிதி திருப்தி

வடபகுதியில் இப்பொழுது புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள 'கார்டினல்' என்ற புதிய ரக உருளைக்கிழங்கு விவசாயிகள்மத்தியில் அதிக வரவேற்பைப் பெற்றுவருகின்றது.

தென்பகுதியில் ஏற்கனவே அறிமுகமாகியிருந்த போதிலும் வரட்சியைத் தாங்கிக் கொண்டு விளைச்சலை அதிகமாக வழங்கக்கூடிய இந்த ரகத்திற்குஇப்பொழுதுயாழ் விவசாயிகள் மத்தியில் மவுசு பிறந்துள்ளது.

ஒன்றுக்கு இருபது வித விளைச்சலை இந்த விதை உருளைக்கிழங்கிலிருந்துபெற முடிவதாக விவசாயிகள் தெரிவிக்கிறார்கள்.

ஒல்லாந்தில் 'வுல்ஃப் அன் வுல்ஃப்' குடும்ப ஸ்தாபனத்தாரினால் உற்பத்திசெய்யப்படும் இந்த விதை உருளைக்கிழங்கு உலகின் பல பாகங்களிலும் பயிரிடப்படுகின்றது.

அண்மையில் இலங்கைக்கு விஜயஞ்செய்திருந்த இந்த ஸ்தாபனத்தின் உறுப்பினர்களில் ஒருவரான திரு. சாம் வுல்ஃப் யாழ்ப்பாணத்திற்கும் விஜயஞ்செய்து 'கார்டினல்' விதை உருளைக்கிழங்கு பயிரிடப்படும் இடங்களைச் சென்று பார்வையிட்டார். கொழும்பு கெமிக்கல் கொன்சோர்டியம் ஸ்தாபனத்தைச் சேர்ந்த திரு. மனோகரனும் இவருடன் வந்திருந்தார்.

'கார்டினல்' விதை உருளைக்கிழங்கு பயிரிட்டுள்ள புத்தூரைச் சேர்ந்த வேலுப்பிள்ளை, சிறுப்பிட்டியைச் சேர்ந்த ஏ' சி துரைசிங்கம், அச்சுவேலியைச் சேர்ந்த குருசுமுத்து அந்தோனிப்பிள்ளை ஆகியவர்களையும் வேறு பலரையும் திரு. வுல்ஃப் சந்தித்து உரையாடினார். கிழங்கு பயிரிடும் முறை பற்றியும் விவசாயிகளுக்கு அவர் விளக்கினார்.

இந்த ரகம் அதிக விளைச்சலைத் தருவதாக இவர்கள் அபிப்பிராயம் தெரிவித்தனர். அடுத்த போகத்திலும் இதே ரகத்தை இறக்குமதிசெய்யும்படி கோர விருப்பதாக இவர்கள் தெரிவித்தனர்.

விவசாய அபிவிருத்தி அதிகாரி திரு. சிவமுத்துலிங்கம், திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சியாளர் திருமதி சண்முகநாதன், புத்தூர் விவசாய ஆலோசகர் யோகலிங்கம் ஆகியவர்களையும் இவர்கள் கலந்துரையாடினர்.

100 தொன் 'கார்டினல்' விதை உருளைக்கிழங்கை இந்த முறை விவசாயத் திணைக்களம் வடபகுதிக்கு அனுப்பியுள்ளது.. அடுத்த முறை இது மேலும் அதிகரிக்கலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது'

இந்த ரகக் கிழங்கு பெரிதாகவும், முட்டை வடிவத்திலும் சிவந்த நிறமுடன் காணப்படுவதாகவும் அதன் உட்புறம் வெளிறிய மஞ்சள் நிறமாகக் காணப்படுவதாகவும் கூறப்படுகிறது.

எல்லா ரக நிலத்திலும் அடர்த்தியாக வளரக்கூடியதென்றும் நோய் எதிர்ப்புச் சக்தி கொண்ட இவை வரட்சியை நன்கு தாங்கக்கூடியவையாம். சமைத்தால் கெட்டியாகவும், உருசியாகவும் இருக்குமென்று திரு. வுல்ஃப் தெரிவித்தார்.

ஒல்லாந்தில் விதை உருளைக்கிழங்கு ஏற்றுமதிசெய்யும் பெரிய கம்பனிகளில் ஒன்றாகத் திகழும் வுல்ஃப் அன் வுல்ஃப் நிறுவனம் வேறு பலரக உருளைக்கிழங்குகளையும் உற்பத்திசெய்தபோதிலும் இப்பொழுது 'கார்டினல்' ரகத்தையே அதிகமாக ஏற்றுமதிசெய்கின்றன.

அண்மையில் 4 லட்சம் தொன் 'கார்டினல்' விதை உருளைக்கிழங்கை ஏற்றுமதி செய்துள்ளது. அண்மையில் இந்த ஸ்தாபனம் தனது 75வது ஆண்டு நிறைவைக் கொண்டாடியது. கோண்டாவில் பத்மா விவசாயப் பண்ணையில் விஞ்ஞான முறையில் விவசாயத்தை அபிவிருத்தி செய்துவருபவரான திரு சம்பந்தர் பத்மநாப இவ்விழாவில் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது'

அல்ஜீரியா, பெல்ஜியம், பங்களாதேஷ், கமரூன், கியூபா, எகிப்து, பிரான்ஸ் இத்தாலி, பாகிஸ்தான், தாய்லாந்து, இலங்கை மற்றும் பல நாடுகள் இந்த விதை உருளைக்கிழங்கை இறக்குமதிசெய்வதாக திரு. சாம் வுல்ஃப் தெரிவித்தார்.

## ஆபரணத் தொழிலாளர் கஷ்டம்

அரசியலார் பவுண் பர்மிட் வழங்காததால் 10,000 பேர் வடபகுதியில்மட்டும் தொழில் வாய்ப்பின்றி வாடுகின்றனர் பவுணின் விலையோ நாளுக்கு நாள், மணித்தியாலத்திற்கொரு விலை விற்கின்றனர் நகை வியாபாரிகள்.

பவுணின் விலையைக் கட்டுப்பாட்டிற்குள் வைக்காததும் அரசியலாரின் ஒரு குறையாகும். ஆடம்பரப் பொருள் என மதித்து அரசாங்கம் கண் மூடித்தனமாக இருப்பதால் ஆபரணத் தொழில் புரிவோரின் நிலை மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது ஆபரணத் தொழிலாளர்களுக்கு 1952 ம் ஆண்டிலிருந்து அமுலாகிய பவுண் பர்மிட் விநியோகமும் சரிவர நடைபெறவில்லை.

1972 ம் ஆண்டிலிருந்து 1977 வரை பவுண் விநியோகமே நடைபெறவில்லை.

இதனையிட்டு ஆபரணத் தொழிலாளர் சங்கம் பத்திரிகை வாயிலாகவும் மகஜர் மூலமாகவும் அரசுக்கு அடிக்கடி வலியுறுத்தியதன் பேரில் 1978 ஐப்பசி மாதத்தில் பர்மிட் முறையில் பவுண் விநியோகிக்கப்பட்டது. பின்பு 1979 ல் பவுண்பர்மிட் கொடுபடவில்லை. 1980 ஆகியும் அரசாங்கம் ஆபரணத் தொழிலாளர் பவுண் பர்மிட் விஷயத்தில் அக்கறை காட்டியதாகத் தெரியவில்லை. ஆபரணத் தொழிலாளர்களை தொழில் வாய்ப்பின்றி அலையவிடாது ஆக்கமும் ஊக்கமும் கொடுத்துதவுமாறு அரசாங்கத்தைச் சங்கச் சார்பாக வேண்டிக் கொள்கிறேன்.

மு. பொன்னுச்சாமி
தலைவர்.
யாழ். ஆபரணத்
தொழிலாளர்
கூட்டுறவுச் சங்கம்.

கன்பொல்லை
மாதிரிக்கிராம

## வேலைகளை பிரதமர் பார்வையிடுவார்

(நெல்லியடி)

பிரதம மந்திரி திரு. ஆர், பிரேமதாசா இம்மாத நடுப்பகுதிக்குள், யாழ், மாவட்டத்திலுள்ள கன்பொல்லை மாதிரிக்கிராமத்தில் நடைபெற்றுவரும் நிர்மாண வேலைகளை நேரில் அவதானிப்பதற்காக விஜயம்செய்யவுள்ளார்.

இந்நவீன கிராமத்தில் முதற்கட்டமாக 100 வீடுகள் உட்பட வீதிகள் வாசிகசாலை என்பன அமைக்கும் வேலைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ஈ)

......

## நெல்லியடியிலிருந்து புதிய பஸ்சேவை

(நெல்லியடி)

பருத்தித்துறை இ. போ. ச. டிப்போ நெல்லியடியிலிருந்து கொடிகாமத்திற்குபுதியதொரு பஸ் சேவையை ஆரம்பித்துள்ளது.

இக்குறுகிய தூரபஸ்சேவையினால் வர்த்தகர்கள் உட்பட வைகயிரத நிலையத்திற்கு செல்லும் பிரயாணிகள், மாணவர்கள் என்போர் பெருநன்மை அடைகின்றனர். (ஈ)

# வடபகுதி மக்களுக்கு வேலைவாய்ப்புக் குறைவு

## வ. போ. ச. தலைவர் கூறுகிறார்

(யாழ்ப்பாணம்)

''இலங்கையின் ஏனைய பிரதேசங்களில் வாழும் மக்களைவிட வடபகுதியில் வாழும் மக்களுக்கே மிகவும் குறைந்த அளவிலான வேலைவாய்புக் கிடைக்கின்றது.

யாழ். கோண்டாவில் டிப்போவில் சாரதிகள் பயிற்சிப் பாடசாலையை மீண்டும்திறந்து வைத்துப் பேசிய வடபிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் திரு. டட்லி குணசேகரா மேற்கண்டவாறுகூறினார்.

சாரத்திப் பயிற்சிபெறுபவர்கள், அதிகாரிகள், ஊழியர்கள் ஆகியோரும் இவ்வைபவத்தில் கலந்து கொண்டர்.

திரு. டட்லிகுணசேகரா தொடர்ந்து பேசுகையில்கூறியதாவது,மேலிடத்தின் தொடர்புகள் வடபகுதி மக்களுக்கு மிகவும் குறைவாக இருப்பதாலேயே இவ்பகுதி மக்களுக்கு மிகவும் குறைந்த வேலைவாய்ப்புகள் கிடைக்கின்றன.

வடபகுதி போக்குவரத்துச் சபையின் மேல்மட்டக்கதவுகள் இப்பகுதி மக்களுக்காக எந்த நேரமும் திறந்தபடியிருக்கும். மக்கள் தங்களின் குறைகளையும் தேவைகளையும் எம்மிடம் தெரிவித்தால் அதற்கு இயன்றளவு பரிகாரம் தேட முயற்சிப்போம்.

படித்துவிட்டு வேலைவாய்ப்பின்றி இருக்கும் இளைஞர்கள் பலர் தமக்கு வேலைவாப்பு அளிக்கும்படி என்னிடம் வேண்டுகோள் விடுத்தனர். அவர்களில் சிலருக்கு இங்கு பயிற்சி அளிக்கப்படும். இப் பயிற்சிப் பாடசாலையில் பயில்பவருக்கு எங்கும் வேலைவாய்ப்புகள் கிடைக்க முடியும்.

### அமைச்சரின் விருப்பம் நிறைவேறுகிறது

கடந்த காலங்களில் வெரஹராவிலுள்ள பாடசாலையிலேயே வடபகுதியினருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வந்தது வடபகுதியிலுள்ள இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கவேண்டுமென போக்குவரத்து அமைச்சர் அல் ஹாஜ் எம். எச். மொகமட்விரும்பினார். அதனாலேயே மூடப்பட்ட பயிற்சிப்பாடசாலை மீண்டும் ஆரம்பிக்கப்படுகிறது.

இங்கு ஒருவருக்குப் பயிற்சி அளிக்க 3 ஆயிரம் ரூபா செலவாகிறது. பயிலுவர்களே அப்பணத்தை வழங்கிப் பயிற்சிபெறுகிறார்கள். திறமைமிக்க பயிற்சியாளர்களால் பயிற்சி அளிக்கப்படுகிறது, பயிற்சியில் சித்தி எய்தியவர்களுக்கு அரசாங்கத்திலோ, தனியார் துறையிலோ அன்றி வெளிநாடுகளிலோ வேலைவாய்ப்பும் பெறுவது சுலபமாக இருக்கும்.

வடபிராந்தியத்தில் உள்ள ஊழியர்கள் சிலருக்குச் சம்பள உயர்வு வழங்கவேண்டுமென கூறப்பட்டது. சம்பளஉயர்வை என்னால் வழங்கமுடியாது. மந்திரிசபைதான் சம்பள உயர்வுபற்றி தீர்மானிக்க வேண்டும்.

நான் இ.போ.சவின் மத்திய சபை உறுப்பினராக இருப்பதால் இ. போ. ச. ஊழியர்களுக்குச் சம்பள உயர்வு வழங்கும்படி சிபார்சு செய்துள்ளேன். கூடியகெதியில் சம்பள உயர்வு கிடைக்கலாம் என எதிர்பார்க்கிறேன்.

### சாரதிகளுக்கு...

பஸ்செலுத்தும் சாரதி மிகவும் பொறுப்புணர்ச்சி மிக்கவராக இருக்கவேண்டும். சாரதியின்மேல் நம்பிக்கைவைத்தே பிரயாணிகள் பிரயாணத்தை மேற்கொள்ளுகிறார்கள். சாரதிகளின் கவனம்சிறிது தவறினாலும் பல உயிர்களுக்கு ஆபத்து நேர்ந்துவிடும்.

பஸ் ஓட்டுனர்களினதும் நடத்துனர்களினதும் சிறந்த சேவையினால் பொதுமக்களுக்கும் அரசுக்கும் நல்ல உறவை ஏற்படுத்த முடியும். இவர்கள் சிறுதவறு செய்தாலும் அத்தவறு அரசுக்கும் இ. போ. சவுக்கும் எனது பெயருக்கும் கெட்டபெயரை ஏற்படுத்திவிடும். எனவே ஊழியர்கள் எல்லோரும் சேவை மனப்பான்மையுடன் தமது கடமையைச் செய்யவேண்டும்.

நிர்வாகப்பகுதியிலுள்ள உயர் அதிகாரிகள் தங்களின் கீழ் வேலைசெய்யும் உத்தியோகத்தர்களுடனும் சிற்றூழியர்களுடனும் மிகவும் அன்பாகப் பழகவேண்டும், ஊழியர்கள் அதிகாரிகள் மத்தியில் நல்லுறவு ஏற்பட்டால்தான் பொதுமக்களுக்கு நல்ல சேவையை நடாத்தமுடியும்.

அதிகாரிகள், ஊழியர்கள் ஆகியோர் தமக்குக் கிடைத்த உரிமைகளையும், சலுகைகளையும் தவறான வழியில் பிரயோகிக்கக்கூடாது. பொதுமக்களுக்கு நன்மைசெய்வதையே நோக்கமாகக்கொண்டு செயல்படவேண்டும். தவறான பிரசாரத்தில் ஈடுபடும் ஊழியர்கள்மீது கடும்நடவடிக்கை எடுகப்படும்.

ஆளணி முகாமையாளர் திரு. பற்குணம், டிப்போ அதிகாரி திரு. மயில்வாகனம் பயிற்சிப் பொறுப்பதிகாரி திரு. எம். ஏ. சிவலோகநாதன், தொழிற்சங்கத் தலைவர் திரு. இராசேந்திரம், திரு. நல்லதம்பி ஆகியோரும் உரையாற்றினர். (கொ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட பிராந்திய

## இ. போ. ச. வில் சிற்றூழியர் பதவி உயர்வு

(நெல்லியடி)

வட பிராந்திய போக்குவரத்துசபை டிப்போக்களில் பணிபுரியும் பொறியியல் பிரிவு சிற்றூழியர்கள் விரைவில் மூன்றும் தரத்திற்கு பதவியுயர்வு பெறவுள்ளனர். இதற்கான நேர்முகப் பரீட்சைகள் கோண்டாவில் இ. போ. ச. வில் நடைபெறவுள்ளன.

வடபிராந்திய போக்குவரத்துசபை, டிப்போக்களிலுள்ள சாரதிகளுக்கான பதவி வெற்றிடங்கள் சபையின் சிற்றூழியர்கள் மூலம் நிரப்பப்படவுள்ளன. சாரதி அனுமதிப்பத்திரம் உள்ள சேவிஸ்மென்ஸ், சமயாசமய ஊழியர் என்போர் இச்சாரதி பதவிகளுக்கு விண்ணப்பித்துக் கொள்ள இம் மாதம் 10 ம் திகதிவரை அவகாசம் கொடுகப்பட்டுள்ளது. (ஈ)

## தவக்கால நற்சிந்தனை



### செபம் செய்யுங்கள்

இயேசுவின் வாழ்வில் செபம் ஒரு முக்கிய இடத்தைப் பெற்றிருந்தது. அவர் தமது பகிரங்க வாழ்வைத் தொடங்குமுன் நாற்பது இரவும் பகலும் செபத்தில் செலவழித்தார். பகல் முழுவதும் போதித்தபின் களைப்பைக் கவனியாமல் இரவில் வெகுநேரம் செபித்தார். முக்கிய தீர்மானங்கள் செய்யவேண்டியிருந்தால் அதற்குமுன் வெகுநேரம் செபிப்பார். பாடுபடுமுன்னும் முக்கியமாக சிலுவையில் தொங்கும் போது அவர் செபித்தார்.

எனக்கு ஒரு மேல்வரிச்சட்டமாக இயேசு வாழ்ந்தார். அவரைப்போல் நானும் செபவாழ்வு வாழவேண்டும் என்று விரும்புகிறார். செபத்தில் ஆனந்தமும், பலமும், அறிவும் நான் பெறவேண்டுமென அவர் ஆசிக்கிறார்.

இத் தபசு காலத்தின் முழுப் பயனைப் பெறத் தேவையானதில் செபம் முக்கியமானது. எனவே இத்தபசு காலத்தில் செபத்தில் இறைவனோடு ஒன்றிக்க முயலுவோம். குடும்பச் செபம், தனிச் செபம், தியானம் வழியாகச் செபிக்கும் முறையைக் கூற்றுக் கொள்வோம்.

— வண. மேரி பஸ்ரியன் அடிகள்.

இன்று கொடித்தினம்

# கைதடி சைவச்சிறுவர் இல்லத்தின் சீரியபணி



சைவச் சிறுவர் இல்லத் தலைவர் திரு. வே முத்துக்குமாரசாமி

மேன்மைகொள் சைவநீதி உலகெலாம் விளங்கும் வகையில் கைதடிச் சைவச் சிறுவர் இல்லம் சைவச் சிருரைச் சீராட்டிப் பாராட்டி அவர்களுக்குச் சை ப் பிரவேச தீட்சை, சமயஅறிவு, பண்பாடு, கல்வி, கைத்தொழிற் பயிற்சி ஆகியவற்றை உவந்தளித்துவருகிறது. இச்சேவை சிவனுர் மனங்குளிர உவக்கும் சேவையாகும். இச்சேவைக்கு மனம்படைத்த பெரியார்களும் பொதுஸ்தாபனங்களும் மனமுவந்து உதவியும், மாகேசுர பூசை நடத்தியும் இக்கருணை இல்லத்து செல்வங்களுக்குத் தாயெனத் திகழ்ந்துவருகின்றன.

1976ம் ஆண்டு ஆவணித் திங்கள் இருபத்தேழாம் நாளன்று மட்டக்களப்பு இராமக் கிருஷ்ணமிஷன் தலைவர் மேன்மைக்குரிய சுவாமி ஜீவானந்தா மகாராஜிஞல் மூன்று சிறுவர்களுடன் தொடக்கி வைக்கப்பெற்ற இவ்வில்லம் இன்று 87 சிறுவர்களையும், ஆறு திக்கற்ற வளர்ந்த பெண்களையும் கொண்டு வங்கியில் ஒரு இலட்சரூபா நிரந்தர வைப்புப் பணத்தையும்கொண்டு விளங்குகின்றது. இல்லத்தின் வளர்ச்சிக்கு உடல், பொருள், ஆவி அத்தனையையும் அர்ப்பணித்து



-- ஆறுமுகம் கந்தையா --
(நிர்வாகச் செயலாளர்).

இல்லத்திலேயே வாழ்ந்துவரும் தருமசீலர் தம்பி விசுவப்பாவின் தன்னலங்கருதாத பெரும் பணி என்றும் நினைவுகூரத்தக்கது. அரசினரால் உவந்தளிக்கப்பெற்ற மூன்று ஏக்கர் நிலத்தில் இன்று ஆறு லட்சம் ரூபா பெறுமதியான மூன்று கட்டிடங்கள் நிறுவப்பட்டுள்ளன. 155 அன்பர்கள் பிறந்த தினங்கள், நினைவு தினங்கள் ஆகியவற்றின்போது மாகேசுர பூசை செய்கின்றனர். நேரில் வரமுடியாதவர்கள் ரூபா நூறு வழங்குகின்றனர்.

கைத்தொழில் நிலையம் அமைத்தல், தண்ணீர்த்தாங்கி கட்டுதல், சுற்றிவர மதில் கட்டுதல், மண்நிரப்புதல் போன்ற பணிகள் எம்மை எதிர்நோக்கியுள்ளன. கடந்தகாலத்தில் முடிவுற்ற பணிகளுடன் ஒப்பிட்டுப்பார்க்கும்போது இவை அனைத்தும் அடுத்த வருடத்தில் முடிவுற்றுவிடும் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

தெய்வ நம்பிக்கையும், மனிதப்பண்பும், ஒழுக்கநெறியும் ஒன்ருகப் பேணக்கூடியதாக சிருர்களைப் பயிற்றும் நிலையமாக விளங்கும் இவ்இல்லத்தின் சீரிய பணிக்கு ஆதரவளிப்போர்க்கு கொடிநாள் ஒரு வரப்பிரசாதமாகும். சிறுதுளி பெருவெள்ளமாகப் பொங்கி நிறைவை ஏற்படுத்தும் நாள் இன்ருகும்.

## சைவச்சிறுவர் இல்லத்தை பேணுவதே பெருந்தர்மம்

ஈழத்திருநாட்டின் திக்கற்ற இளஞ்சைவச் சிருர்களின் சமயவளர்ச்சியையும், கல்வி வளர்ச்சியையும் கருத்திற்கொண்டு சைவச் சிறுவர் இல்லம் 1974ம் ஆண்டு ஆனி மாதம் ஆரும் திகதி யாழ். மாவட்ட அரசாங்க அதிபரால் அத்திபாரமிடப்பட்டு ஆரம்பிக்கப்பட்டது.

தருமவான்களின் பொருள் சேகரிக்கும் தலைசிறந்த வங்கியாக கைதடி சைவச் சிறுவர் இல்லம் திகழ்வது கண்கூடு. தெய்வப் புலமைத் திருவள்ளுவர் "அற்ருர் அழிபசி தீர்த்தல் அஃதொருவன் பெற்ருன் பொருள்வைப் புழி" என்னும் திருக்குறளில் "கடவுள் அருளால் பொருளைப் பெற்றவன் அப்பொருள் இம்மையிலும் மறுமையிலும் பயன் கொடுக்கும்படி சேமித்து வைக்கவல்ல சிறந்த பாதுகாப்பான வங்கி ஏழைகளின் வயிறுகளே" என்று குறிப்பிட்டுள்ளார். பொருளினுலே அவசியமாகச் செயப்பாலனவாகிய உத்தம தருமங்களைப் பன்னிரண்டு வகைப்படுத்தி, அத்தருமங்களின் சிகரமாக நாவலர்பெருமான் நான்காம் பாலபாடத்தில், தருமம் என்னும் தலைப்பில் "அநாதைப் பிள்ளைகளை வளர்த்துக் கல்வி கற்பித்தல் வேண்டும்"என்று குறிப்பிட்ட அறவுரையை நாம் ஈண்டு சிந்திக்கவேண்டும்.

நாம் அனைவரும் ஒரே இறைவனின் குழந்தைகள். எனவே சகோதரர்கள்! உயிர்க்குலமனைத்தையும் ஒரே கும்பமாகக் கொண்டு அன்பு பெருகி, அனைத்துயிர்க்கும் இன்பஞ்செய்து அன்பே சிவமாவதை அறிந்து வாழ்பவர்கள்; எனவேதான் உண்டு. தன் குடும்பமுண்டு என்று வாழும் தன்னலவாழ்வு நீங்கி, பிறர் நலம் பேணும் பெற்றியராய் உள்ளதை உற்ருர், உறவினர், அயலவர், ஏழைகளுடன் பகிர்ந்துண்டு வாழக் கடமைப்பட்டுள்ளோம். "துறவினருக்கும், வறியோர்க்கும், பிதிரர்களுக்கும் உதவுவதற்காகவே இல்வாழ்வான் இல்லற வாழ்வை மேற்கொண்டுள்ளான்"- என்று வள்ளுவப் பெருந்தகை குறிப்பிட்டது போல, ஆதரவற்ற குழந்தைகளிடத்தில் உறையும் சிவனையே வழிபாடு செய்யுமுகமாக அவர்களுக்கு உண்டியும், உறையுளும், கல்வியறிவும் கொடுத்துதவி, அன்பு பெருகி வாழும் வாழ்வுதான் பேராணந்தப் பெருவாழ்வாகிறது என்ருல் மிகையாகாது. இவ்வகையில் கடந்த அருண்டுகளாகப் பெருந்தொண்டாற்றி வருகின்ற கைதடி சைவச் சிறுவர் இல்லப் பொதுச் செயலாளர் ஆறுமுகம் கந்தையாவையும், நிர்வாகக் குழுவினரையும், வாரிவழங்கும் வள்ளற் பெருமக்களையும் பாராட்டாமல் இருக்கமுடியாது.

சைவமக்களிடையே தம்மை ஒறுத்துத் தானம் வழங்க வேண்டும் என்ற நல்லுணர்வு பெருகுவதாக; பணம்படைத்த பெருமக்கள் மனமுவந்து பெருநிதி வழங்கி உதவுவார்களாக, நல்லுள்ளம்படைத்த-பொருள் வளமற்ற நன்மக்கள் பேச்சாலும் எழுத்தாலும், சிரமதானப்பணியாலும் பேராதரவு வழங்குவார்களாக.

வாழ்க சைவச் சிறுவர் இல்லம்! வளர்க அறவோர் திருக் கூட்டம்!!

-- க. ஞானச்சந்திரன் --
(யாழ். மாவட்ட மேலதிக நீதிபதி)

## கச்சதீவு யாத்திரிகருக்கு வயிற்ருேட்டம்

(யாழ்ப்பாணம்)

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்திற்குச் சென்ற யாத்திரிகர்கள் பலர் வயிற்ருேட்ட நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் இந்நோயைப் பரவவிடாது தடுப்பதற்கான தீவிர நடவடிக்கையை கச்சதீவு சுகாதார அதிகாரி மேற்கொண்டுவருகிருர்.

(கொ-இ)

கச்சதீவில்

## இந்திய யாத்திரிகரிடம் கொள்ளை அடித்தனராம்

### 5 இலங்கையர் காவலில்

(கச்சதீவு)

கச்சதீவில் …ந்திய யாத்திரிகர்களின் பொருட்களைக் காள்ளையடித்ததாக ஐந்து இலங்கை இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சச்சதீவில் உள்ள தற்காலிக நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்ட இவர்கள் ஐவரும் றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

கச்சதீவுப் பொலிஸ்பொறுப்பதிகாரி திரு. என். சேளுதிராசா தலைமையில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிசாரே இவர்களைக் கைதுசெய்தனர்.

ஐந்து இளைஞர்களும் இந்திய யாத்திரிகர்களிடம் இருந்து பொருட்களைக் கொள்ளையடிக்கும்போது பொலிசார் கையும் மெய்யுமாகப் பிடித்துள்ளனராம்.

கொள்ளையர்கள் ஐந்துபேரும் யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவுள்ளனர்.

(கொ-)

## யாழ். வரும் 'ராசு'வுக்கு பொது வரவேற்பு இல்லை

(கொழும்பு)

உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு இம் மாதம் யாழ்ப்பாணம் வரும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் திரு. செல்லையா இராசதுரைக்குப் பொது வரவேற்புகள் எதுவும் அளிக்கப்படமாட்டாது.

தமது முதலாவது யாழ் விஜயத்தை திரு. இராசதுரை உத்தியோக ரீதியான விஜயமாக மேற்கொள்வதால் பொது வரவேற்புகளில் கலந்து கொள்ள அவருக்கு வசதியிருக்காதென பிராந்திய அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் திரு. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

வடபகுதியில் அமைச்சர் திரு. இராசதுரையை வரவேற்பதற்கு பல பொது ஸ்தாபனங்கள் ஏற்பாடு செய்திருந்தபோதும், இம்முறை அவர் திடீரென உத்தியோக விஜயத்தைமேற்கொண்டுள்ளதால் பொது வைபவங்களில் கலந்து கொள்ள முடியாத நிலை இருப்பதாகத் தெரிகிறது.

திரு. இராசதுரையின் விஜயத்துக்கான சகல ஏற்பாடுகளையும் யாழ். அரசாங்க அதிபர் திரு. யோகேந்திரா துரைசுவாமி மேற்கொண்டு வருகிருர்.

யாழ்.மாவட்டத்தின் அபிவிருத்தி சம்பந்தமான கருத்தரங்குகளில் அமைச்சர் கலந்து கொள்ளவிருக்கின்ருர்.

(வண்-இ)

## பண்ணுகத்தில் சங்கிலி அறுப்பு

### கஞவாஞ்சிக் குடியில் சந்தேகநபர் கைது!

(பண்டத்தரிப்பு)

பண்ணுகத்தில் கடந்த மாதம் நடைபெற்ற சங்கிலித் திருட்டுத் தொடர்பாகத் தேடப்பட்டு வந்த நபர் ஒருவர் கஞவாஞ்சிக்குடியில் வைத்து கைது செய்யப்பட்டார்.

சுழிபுரத்தைச் சேர்ந்த 'சூரி' என்று அழைக்கப்படும் சூரியகுமார் என்ற நபரே கஞவாஞ்சிக்குடி பொலிசாரால் கைது செய்யப்பட்டார்.

கடந்த மாதம்பண்ணுகத்தில் உள்ளவீடொன்றில்புகுந்த இந்நபர்வீட்டிலிருந்ததிருமதி சிவக்கொழுந்து என்ற வயோதிபமாதிடம் குடிக்க மோர் தரும்படி கேட்டதாகவும் அம்மாது மோர் எடுக்க உள்ளே சென்றபோது திடீரென உட்புகுந்து அவரிடமிருந்த சங்கிலியை அறுத்துக் கொண்டு ஓடி விட்டதாக பொலிசில் புகார் செய்யப்பட்டிருந்தது.

இதை அடுத்து பொலிசார் தலைமறைவாகிவிட்ட அந்நபரைத் தேடி வந்தனர்.

சந்தேக நபர் தாம் திருடிய சங்கிலியை விற்று 'கஸட்' வாஞெலி ஒன்றை வாங்கியதாகவும் சங்கிலியில் இருந்த 'பென்ரனை' பண்டத்தரிப்பில்

(8ம் பக்கம் பார்க்க)

# யாழ். மாவட்டத்தில் பால் உற்பத்திக்கு ஊக்குவிப்பு

## மாவட்ட அமைச்சு துரித நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

"யாழ் மாவட்டத்தில் பால் உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்கமாக யாழ் மாவட்ட அமைச்சு குடாநாடு முழுவதிலும் பொருத்தமான இடங்களில் பால் சேகரிப்பு நிலையங்கள் அமைத்து குளிரூட்டப்பட்டுச் சுத்திகரிக்கப்பட்ட பாலை சந்தைப்படுத்திப் பொது மக்களுக்கு வழங்க மாவட்ட அமைச்சு திட்டமிட்டுள்ளது" என்று யாழ் மாவட்ட அமைச்சின் பத்திரிகைத் தகவல் பகுதி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

இத்திட்டத்தின் கீழ் அமைந்த முதலாவது பால் சேகரிப்பு நிலையமொன்று சென்ற வருடம் ஐப்பசி மாதத்தில் கிளிநொச்சித் தொகுதியில் சிறு கைத்தொழில் அமைச்சர் திரு. செ. தொண்டமானுல் திறந்துவைக்கப்பட்டது.

திருநெல்வேலியில் [illegible] டாவது பால் சேகரிப்பு நிலையத்திற்கான அத்திபாரக்கல் அரசாங்க அதிபர் திரு. யோகேந்திரா துரைசுவாமியால் நாட்டப்பட்டுபூர்வாங்க வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்நிலையத்திற்கான கட்டிட வேலைகள் யாவும் மே மாதம் 5 ந்திகதிக்குமுன் முடிவடைவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன.

இந்நிலையத்தின் ஆரம்பரீதியாக 8000 பைந்து பாலை சேகரித்து வைக்கக்கூடிய பண்ணைக் குதங்கள் அமைக்கப்படவிருக்கின்றன. காலகதியில் 1600 பைந்து பாலை சேகரித்து வைப்பதற்கான பண்ணைக் குதங்கள் அமைக்கப்படவிருக்கின்றன.

திருநெல்வேலியில் அத்திபாரக்கல் நாட்டப்பட்ட பால் சேகரிப்பு நிலையம் கிளிநொச்சி நிலையத்துடன் இணைந்து செயல்புரியும். கிளிநொச்சித் தொகுதியின் தேவை பூர்த்தி செய்யப்பட்டு மிதமிஞ்சியிருக்கும் பாலை திருநெல்வேலி நிலையத்தில் சேகரித்து வைக்கக்கூடிய ஒழுங்குகள் செய்யப்படவிருக்கின்றன.

இந்நிலையத்திற்கான கட்டிடம் சிறந்த முறையில் நிர்மாணிக்கப்படவிருக்கின்றது. அரசாங்க கட்டிடப் பகுதியினர் இக்கட்டிடவேலைகள் சம்பந்தமான நிர்மாண ஒழுங்குகளைச் செய்து வருகின்றனர். இந்நிலையம் பூர்த்தியாக்கப்பட்டதும் நிலையம் இயங்குவதற்கான உபகரணங்கள் யாவற்றையும் பாற்சபை வழங்கும்.

இந்நிலையம் அமையப்போகுமிடம் காலப்போக்கில் கால்நடை அபிவிருத்திக்கான கருவூலமாக அமையும். பாற்பண்ணை ஒன்றும் ஏற்படுத்துவதற்கு இத்திட்டம் வழிவகுக்கும். சிறந்த வர்க்க கால்நடை தருவிக்கப்பட்டு அப்பண்ணை சிறந்த முறையில் இயங்குவதற்கு ஏற்பாடாகியுள்ளது. ஆரம்பரீதியில் 75 கறவை மாடுகள் இப்பண்ணையில் பயன்டடுத்தப்படும். இப்பண்ணை சகல வசதிகளுடன் கூடியதாக விருக்கும் கால்நடைத்தீன் கூட்டுச்சேர்க்கப்படும் உபகரணம் ஒன்று இப்பண்ணையில் அமைக்கப்படவிருக்கின்றது.

(கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "இனத்துவேஷம் இருக்கும்வரை இந்நாடு முன்னேறமுடியாது"

## யாழ். வரவேற்பு விழாவில் பிரதிக்கல்வி அமைச்சர்

(யாழ்ப்பாணம்)

"இலங்கையைப்போன்று உலகில் வேறெந்த நாட்டிலும் இன, மத, சாதிபேதங்கள் கிடையாது. இனத்துவேஷம் இந்நாட்டில் உள்ளவரை நாடு முன்னேறவே முடியாது. எங்கள் மத்தியில் ஒற்றுமை ஏற்படவேண்டும். அதேபோன்று மனிதன் ஒற்றுமையின்றி வாழமுடியாது. ஆதலால் சகல இனங்களுக்கிடையே ஒற்றுமையை வளர்க்கவேண்டும். இதுதான் ஜனாதிபதியின் லட்சியமாகும்"

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடந்த கேகாலை மாணவர்கள், ஆசிரியர்களுக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு விழாவில் பிரதி கல்வி அமைச்சர் திரு. சமரவீரவீரவன்னி மேற்கண்டவாறு கூறினார்.

பிரதி அமைச்சர் பேச ஆரம்பித்தபோது இளம் தமிழ்ப் பெண் ஒருவர் மேடையில் ஏறி மலர்ச்செண்டைக் கொடுத்து வரவேற்றார்.

கூட்ட ஆரம்பத்தில் மண்டப முன்றலில் தமிழ், சிங்கள தேசிய கீதங்கள் ஒலிக்க தேசியக்கொடி ஏற்றிவைக்கப்பட்டது.

நீதிஅமைச்சர் திரு. நிசங்கா விஜயரத்தன, பிரதிக் கல்வி அமைச்சர் திரு. சமரவீர வீரவன்னி, யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யூ. பி. விஜயக்கோன் ஆகியோர் மங்களவிளக்கேற்றி வைத்தனர்.

மேடையிலிருந்த சகல சமயத் தலைவர்களும் ஆசியுரை வழங்கினர்கள்.

பிரதிக் கல்விஅமைச்சர் திரு. சமரவீரவீரவன்னி பேசுகையில் மேலும் கூறுயதாவது:-

"ஜனாதிபதிதான் தேசிய ஒற்றுமை முயற்சியை மாணவர் பரிமாற்றுத்திட்டத்தின் மூலம் அமுலுக்குக் கொண்டு வந்ததற்காக முன்னாள் கல்வி அமைச்சருக்கு நன்றிதெரிவிக்கின்றேன். நான் முதல் தடவையாக யாழ்ப்பாணம் வந்திருக்கின்றேன்.

அவதார புருஷரான மகாத்மா மக்களுக்குப் பெருந்தொண்டாற்றினர். நோயின்றி மக்கள் வாழ வழியென்னவென்று கிராமம் கிராமமாகச் சென்று விளக்கினர். மனிதனுக்கு எடுத்துக்காட்டாக அவர் விளங்கினர், அவரது வாழ்க்கையைப் பின்பற்றிய ஜனாதிபதி சமுதாய ரீதியில் ஒற்றுமையை நிலைநாட்ட முயற்சி எடுத்துவருகின்றார். தேசிய ஒற்றுமைக்காக சேர் பொன். இராமநாதன் போன்றவர்கள் உழைத்தார்கள். மொழி வேறுபட்டிருந்தாலும் மனிதர் என்ற முறையில் ஒரே வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் நாம்.

"தேசிய ஒற்றுமை வளர வேண்டுமானால் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்துகொண்டு அன்புசெலுத்தி உதவிபுரிவது அவசியம்.

கேகாலையிலிருந்து வந்துள்ள மாணவர்கள் பௌத்த சமய நெறிகளான அன்பு, சகிப்புத் தன்மை, கலாச்சாரப் பண்பு ஆகியவற்றைக் கொண்டுள்ளார்கள் அன்பும் பண்பும் மனிதவர்க்கத்திற்கு அவசியம். அன்பினால் சமுதாயத்திடையே பகிழ்ச்சிபிறக்கும் இதனால் தான் மக்கள் பத்தியில் தேசிய ஒற்றுமை ஏற்படுத்த முயற்சிக்கின்றோம்.

யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்களை இதிலும் பார்க்க அதிகமாக கண்டாரவளை மாவட்டத்திற்கு எங்கள் விருந்தினராக வரும்படி கேட்டுக்கொள்கிறேன்," (க-அ)

## யாழ். மக்கள் மிகவும் அன்பும்பண்பும்உள்ளவர்கள்

### யாழ். மாவட்ட அமைச்சர் பெருமிதம்

யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யு. பி. விஜயக்கோன் பேசுகையில் கூறியதாவது:

"தமிழ்மாணவர் சிங்கள மொழியையும், சிங்கள மாணவர் தமிழ் மொழியையும் பயிலவேண்டும். அதே நேரத்தில் சகல மாணவரும் ஆங்கிலத்தையும் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதே என் விருப்பம்.

"யாழ். மாவட்ட அமைச்சர் என்ற முறையில் மாணவர்களை வரவேற்கிறேன்.

"இந்தக் குறுகிய காலத்தில் யாழ்ப்பாண மக்கள் மிகவும் அன்புடையவர்கள், நிறைந்த பண்புடையவர்கள் என்டதை அறிந்துகொண்டேன்.

"நாட்டைப் பிரிக்கவேண்டும்; ஒற்றுமையைக் குலைக்க வேண்டுமென யாழ்ப்பாணத் தமிழ்மக்கள் விரும்புவதாகச் சில சிங்கள மக்கள் நினைக்கிறார்கள்.

"யாழ்ப்பாணத்தில் வாழ்கின்ற நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பேர் அப்படியான அபிப்பிராயம் கொண்டவர்கலல்ல. இந்நாட்டில் எல்லோரும் ஒற்றுமையாக இருந்து, அபிவிருத்தியில் ஈடுபட்டு முன்னேற வேண்டுமென்றே அவர்கள் நினைக்கிறார்கள். சிங்கள மக்களும், நாட்டில் ஒற்றுமையாக இருந்து நாட்டை முன்னேற்றவேண்டுமென்றே நினைக்கிறார்கள்.

### சிங்கள இனம் சிறப்பு மிக்க இனம்

"சிங்கள இனம், சிறப்பு மிக்க இனமென்பது சரித்திர உண்மையாகும். எல்லாளன் துட்டகைமுனு யுத்தம் நடைபெற்றபின் போரில் மாண்ட எல்லாள மன்னனுக்கு நினைவுச் சின்னம் எழுப்பியது மட்டுமல்லாமல், அச்சின்னத்திற்கு அருகால் செல்பவர்கள் மரியாதை செலுத்திச் செல்ல வேண்டுமெனத் துட்டகைமுனு உத்தரவிட்டான்.

எதிரியை மதிக்கும் பண்புடைய இனம் உலகில் வேறு கிடையாது. அது இலங்கையில் உள்ள சிங்கள இனம் மாத்திரம்தான் சிங்கள இனம் பரந்த மனப்பான்மை படைத்தது.

"சிங்கள - தமிழ்மக்கள் மத்தியில் தேசிய ஒற்றுமையைக் கட்டிவளர்க்க எல்லாரும் பாடுபடவேண்டும். தேசிய ஒற்றுமையை வளர்க்கும் முயற்சியாக முன்னாள் கல்வியமைச்சர் யாழ்ப்பாண மாணவர்களைக் கேகாலை மாவட்டத்திற்கு அனுப்பிவைத்தார்; அத்திட்டத்தின் தொடர்ச்சியாக இன்று கேகாலை மாணவர்கள் யாழ்ப்பாணம் வந்துள்ளார்கள். மக்கள் என்ற முறையில் எல்லோரும் ஒற்றுமைப் படவேண்டியது அவசியமாகும்."

யாழ். பிராந்தியக் கல்வி அதிபர் திரு. ரி. மாணிக்கவாசகர் வரவேற்புரை நிகழ்த்துகையில் மாணவர் பரிமாற்றத் திட்டம் தேசிய ஒற்றுமையைப் பலப்படுத்தும் என்ருர். [க-அ]

## 9 தொகுதிகளில் ஐக்கியத்தை ஏற்படுத்தும்

[யாழ்ப்பாணம்]

கேகாலை மாவட்டத்தைச் சேர்ந்த 500 மாணவர்கள் நேற்று மாலை மில்க்வைற் நிறுவனத்திற்கு விஜயஞ்செய்தனர். ஸ்தாபன அதிபர் திரு க. கனகராசா மாணவர்களை வரவேற்ருர்.

மாணவர் குழாத்தை வரவேற்று உபசரித்து உரை நிகழ்த்திய மில்க்வைற் அதிபர் இம்மாணவர்களும், ஆசிரியர்களும் பெற்ருேரும் இப்படியானதொரு சுற்றுலாவை மேற்கொண்டு இப்பிரதேசத்திற்கு வருவதற்கு வாய்ப்பொன்றை ஏற்படுத்திய அரசாங்கத்திற்கு நன்றியைத் தெரிவித்தார்.

யோகாசனமும் இடம்பெற்றது.

கேகாலை மாவட்டத்தில் உள்ள 9 தேர்தல் தொகுதிகளிலும் ஐக்கியத்தை ஏற்படுத்த இச்சுற்றுலா உதவுமென்று கருத்துத் தெரிவிக்கப்பட்டது. [அ]

### இ.போ.ச. ஊழியர்

## இளைப்பாற்று மண்டபம் விஸ்தரிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி இ. போ. ச. டிப்போவிலுள்ள ஊழியர் இளைப்பாற்று மண்டபம் மிக விரைவில் விஸ்தரிக்கப்படவுள்ளதுடன், குழாய் நீர் வசதிகளும் அதிகரிக்கப்படவுள்ளன.

மேற்படி டிப்போ ஊழியர் மன்றத் தலைவர் திரு. கே. தியாகராசா, அண்மையில் இங்கு விஜயம் செய்திருந்த வடபிராந்தியபோக்குவரத்துச் சபைத்தலைவர் திரு. டட்லி குணசேகராவிடம் இக்கோரிக்கையை விடுத்திருந்தார். திரு, குணசேகராவுடன், இயக்குநர் சபை உறுப்பினர்களும், இ. போ. ச. உயர்அதிகாரிகளும் கிளிநொச்சி டிப்போவிற்கு அன்றைய தினம் விஜயம்செய்திருந்தார்கள். (நெல். நி:ஈ)

## இரு புலவர்கள் இலங்கை விஜயம்

(நாவலப்பிட்டி)

சமய - இலக்கியச் சொற்பொழிவுகள் நிகழ்த்துவதில் வல்ல இரு புலவர்கள் இலங்கை வந்துள்ளனர்

தமிழ்நாடு புதுக்கோட்டையைச் சேர்ந்த ஒருவர் பெயர் புலவர் கரு. செல்லமுத்து எம். ஏ, பி. எட்., மற்றவர் புலவர் கோ. அரங்க நெடுமாறன் எம். ஏ. கதை, கட்டுரை, கவிதைகள் புனைவதிலும் வல்லலர்களான இவர்கள் கடந்த 25 ஆண்டுகளாகத் தமிழகம் - மலேசியா - சிங்கப்பூர் ஆகிய இடங்களினும் சமயச் சொற்பொழிவாற்றி வருகின்றனர்-

'போர்முரசு' என்ற பத்திரிகையின் ஆசிரியராக இருந்த புலவர் கரு. செல்லமுத்து 'உதிரிப்பூக்கள்' என்ற கவிதைத் தொகுப்பு நூலை வெளியிட்டிருக்கிருர்.

தமிழ்நாட்டில் அரசமேல் நிலைப்பள்ளியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றிவரும் இருவரும் சென்னை வானொலியிலும் பெரும்பங்கு எடுத்து பணியாற்றுகின்றனர்.

இவர்களது முதலாவது சொற்பொழிவு நாவலப்பிட்டி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானத்தில் இன்று திங்கட்கிழமை மாலை நடைபெறவிருக்கிறது. இருவரும் முறையே 'நடராஜதத்துவம்', 'மாரியம்மனும் மாகருணையும்' என்ற தலைப்பில் உரையாற்றுவார்கள். ஆத்மஜோதி நிலையத்தினர் இதற்கான ஒழுங்குகளைச் செய்துள்ளனர்.

### கொலம்பிய தூதரக முற்றுகை நாடகம்:

## பணயக்கைதிகள் எவருக்கும் விரைவில் விடுதலை இல்லை

பொகோட்டா, மார்ச் 9

பொகோட்டாவிலுள்ள டொமினிக்கன் தூதரகத்தில் பணயம் வைக்கப்பட்டுள்ளவர்கள் எவரும் விரைவில் விடுதலை செய்யப்படமாட்டார்கள்.

இவ்வாறு அதிகாரிகளைப் பணயம் வைத்துள்ள கொரில்லா அதிகாரியொருவர் கூறியுள்ளார்.

தளபதி ஒன்று என்று தன்னை அறிமுகப்படுத்தியுள்ள இந்த கொரில்லா, தமக்கும் அரசுக்குமிடையேயான பேச்சுவார்த்தை இரண்டு மூன்று வாரங்களுக்கு நடைபெறலாம் என்றும் அதிகாரிகள் தொடர்ந்து பணயம் வைக்கப்பட்டிருப்பதற்கு கொலம்பிய அரசே காரணம் என்றும் கூறியுள்ளார். (கு)

### ஆப்கானிஸ்தான் நிலவரம்:

## வெளியார் சூழ்ச்சிகள் பற்றி மேஜர்ஜெனரல்காதர் கருத்து

காபூல், மார்ச் 9

"சூரியனை எப்படி கையால் மறைக்க முடியாதோ அதேபோல் எமது புரட்சியை சீர்குலைக்க அமெரிக்காவும் சீனுவும் மேற்கொண்டுள்ள சூழ்ச்சிகளை மூடி மறைக்க முடியாது" என்று ஆப்கான் புரட்சிக் கவுன்சிலின் உறுப்பினர் மேஜர் ஜெனரல் அப்துல் காதர் தெரிவித்துள்ளார்.

1978 ஏப்ரலில் ராணுவத்துக்குத் தலைமை தாங்கி தாவுத் அரசாங்கத்தைத் தூக்கியவர் மேஜர் ஜெனரல் காதர் என்பது குறிப்பிடத்தக்கது.

"சோவியத் ராணுவம் பாகிஸ்தானுக்கு வரப்போவதாகப் பூச்சாண்டி காட்டும் அமெரிக்காவும், சீனுவும் தமக்கு எதுவும் தெரியாதது போல் பாவனை காட்டுகின்றன. ஏப்ரல் புரட்சியை ஏகாதிபத்தியவாதிகள் விரும்பவில்லை. சுதந்திரமான, வலுமிகுந்த, சுபிட்சமிக்க ஆப்கானிஸ்தானை அவர்கள் விரும்பவில்லை. எமது நாடு ஏழ்மையிலும் பாமரத்தனத்திலும் தொடர்ந்திருக்கவேண்டுமென்பதே அவர்கள் விருப்பம். அதனால்தான் எமது நாட்டைத் துண்டு துண்டாக்க விரும்புகிருர்கள். இதை நிறைவேற்றுவதற்காக அவர்கள் நாசகாரச் சக்திகளுக்குப் பயிற்சியளித்து ஆப்கானுக்குள் அனுப்புகிருர்கள். ஆப்கான் — பாக் எல்லையில் ஆயுதங்களும் வெடிகுண்டுகளும் குவிக்கப்பட்டு வருகின்றன என்று அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றனர். கரகோரம் வழியாக சீனுவிலிருந்தும் ஆயுதங்கள் வந்துகொண்டிருக்கின்றன. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## இடமாற்றம்

(நெல்லியடி

வல்வெட்டித்துறை நகரசபையில்மின்னத்தியட்சகராகப் பணியாற்றிய திரு. எஸ். மரியாம்பிள்ளை, அச்சுவேலி கிராமச் சபைக்கு இடமாற்றப் செய்யப்பட்டுள்ளார்.

° ° °

புத்தூர் கிராமச் சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் திரு. கே. எஸ். சுந்தரமூர்த்தி நயினதீவு கிராமச் சபைக்கும், அங்கு கடமையாற்றிய திரு. கே. சிவதாசன் புத்தூர் கிராமச்சபைக்குப் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

### 'சுகாதார ஊழியர்

## பிரச்னைகளை ஐ. தே. க. தட்டிக்கழியாது"

(நெல்லியடி)

ஜாதிக சுகாதார சேவையாளர் சங்கத்தின் வடபிரதேச செயலாளர் திரு. கே. செல்வராசா, தலைவர் திரு. திலகர் ஆகியோர் பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் கடமைபுரியும் ஊழியர்களது பிரச்னைகளையும், தேவைகளையும் கேட்டறிந்து சென்றுள்ளனர்.

"நாட்டுப்பசசலின் நடுவில் சுகாதார ஊழியர்கள் கவனத்திற்கு கொண்டுமெனவும், ஊழியர்களது பிரச்னைகளை ஐக்கியதேசியக்கட்சி அரசாங்கம் ஒருகாலமும் தட்டிக்கழிக்க மாட்டாது" எனவும் இவர்கள் ஊழியர்கள் மத்தியில் உரை நிகழ்த்திச் சென்றுள்ளனர். (ஈ)

## வைத்தியசாலையில் சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

தொல்புரம் மத்தியசனசமூக நிலைய வாசிகசாலையின் ஆதரவில் நிலையத்தலைவர் திரு. கா. சின்னத்துரை தலைமையில் தொல்புரம் மத்திய அரசினர் வைத்தியசாலையில்சிரமதானப் பணி மேற்கொள்ளப்பட்டது.

வைத்திய அதிகாரி திரு.எஸ் இராசநாயகத்தின் ஒத்துழைப்புடன்மேற்கொள்ளப்பட்ட சிரமதானப் பணியில் தொல்புரம் மத்திய கிராம அபிவிருத்திச் சங்கமும், தொல்புரம் மத்திய சர்வோதய இளைஞர்களும் பங்கு பற்றிவைத்தியசாலையின் சுற்றுமதில்களையும் தளபாடங்களையும் துப்புரவாக்கினர். சிரமதானத் தொண்டர்களினது சேவையைப் பாராட்டி மத்திய மருந்தக வைத்திய அதிகாரி திரு. எஸ். இராசநாயகம் நன்றி கூறினார்.

அத்துடன் தொல்புரம் வீதிகளில் மின்சாரக்கம்பங்களுக்கு இடையூறு விளைவித்த மரங்களும் சிரமதானம் மூலம்வெட்டித் துப்புரவுசெய்யப்பட்டது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமெரிக்க பணயக்கைதிகள் விவகாரம்

# ஈரான் அரசுக்கும் மாணவருக்கும் இடையே பெரும் இழுபறி

### ஆணைக்குழு உறுப்பினர்கள் நியூயோர்க் திரும்பலாம்

தெஹ்ரான், மார்ச் 9

ஈரானில் அமெரிக்கத் தூதரகத்தில் மாணவர்களினால் பணயம் வைக்கப்பட்டிருக்கும் அமெரிக்கத் தூதரக அதிகாரிகளை ஈரான் அரசின் பொறுப்பில் ஒப்படைப்பது குறித்த விஷயத்தில் மாணவர்களுக்கும் ஈரானிய அரசுக்குமிடையே இழுபறி ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பணயக்கைதிகளைப்பார்வையிடுவதற்கு சர்வதேச ஆணைக்குழு உறுப்பினர்களை அனுமதிப்பது குறித்த விடயத்தில் ஈரானிய வெளிநாட்டமைச்சர் ஜனுப் குதுப் ஸாதேக்கும் மாணவர்களுக்குமிடையே எழுந்துள்ள கருத்துவேறுபாடுகள் காரணமாகவே இந்த இழுபறி ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பணயக் கைதிகளை நேற்று மாலை ஈரானிய அரசு பொறுப்பேற்பதாக இருந்தபோதிலும் கருத்துவேறுபாடு காரணமாக நேற்று அது நடைபெறவில்லை.

இதேசமயம், இந்த இழுபறி காரணமாக ஈரானிய ஷாவின் நடவடிக்கைகள் குறித்து விசாரணை செய்யும் ஐ. நா. சர்வதேச ஆணைக்குழு உறுப்பினர்கள் விசாரணைகளைக் கைவிட்டுவிட்டு நியூயோர்க் திரும்பலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

அரசுக்கும், மாணவர்களுக்குமிடையிலான சிக்கலுக்கு தங்களால் தீர்வுகாணமுடியாது என்று அந்த உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

ஜனுப் குதுப் ஸாதே ஒரு 'பொய்யன்' என்று மாணவர்கள் தெரிவித்துள்ளனர். (இ)

## ஆப்கானில் ரஷ்ய 'ஜெட்' விமானங்கள் கண்காணிப்பு

காபூல், மார்ச். 9

ஆப்கானிஸ்தானில் நேற்று முன்தினம் என்றுமில்லாதவாறு சோவியத் ஜெட் விமானங்களும், ஹெலிகொப்டர்களும்பறந்துகொண்டிருந்தன.

சோவியத் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நிகழலாமென எதிர்பார்க்கப் பட்டமையினாலேயே இவ்விமானங்கள் கண்காணிப்பில் ஈடுபட்டுக்கொண்டிருந்தன என தெரிவிக்கப்பட்டது.

கடந்த மாதம் 29ம் திகதி வெள்ளிக்கிழமை கடைகள் அடைக்கப்பட்டு சோவியத் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நிகழ்ந்தமையால் இந்த வெள்ளிக்கிழமையும் நடைபெறலாமென எதிர்பார்க்கப்பட்டது. (இ)

## ஈராக் தூதருக்கு வெளியேற்ற உத்தரவு!

தெஹ்ரான், மார்ச். 9

ஈராக் தூதுவரை தெஹ்ரானிலிருந்து உடனடியாகவெளியேறுமாறு ஈரான் உத்தரவிட்டுள்ளது. (இ)

## இலங்கைப் பொருட்களுக்கு கச்சதீவில் மதிப்புக்குறைவு

(யாழ்ப்பாணம்)

இலங்கைப் பொருட்களுக்குக் கச்சதீவில் இம்முறை மதிப்புக் குறைந்து இந்தியப் பொருட்களுக்கு நல்ல மதிப்பு இருந்தது என நமது நிருபர் கச்சதீவிலிருந்து அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து சென்ற பலர் தமது பொருட்களைக் கொடுத்து அதற்குப் பெறுமதியான நல்ல இந்தியப் பொருட்களைப் பெறமுடியாமலிருப்பதாகவும் அவர் கூறினார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொண்டு சென்ற 'மொண்டியா' மணிக்கூடு, 'வின்சிஸ்டர்' டோர்ச்லைட், குடைகள், பார்சோப், தேங்காய் எண்ணை ஆகியவற்றைப் பெருந்தொகையான யாத்திரிகர்கள் திருப்பிக் கொண்டுவந்தனர்.

யாழ் இறங்குதுறையிலிருந்து சாராயம், கராம்பு, சாதிக்காய் ஆகியவற்றைக் கடத்திச் செல்ல முற்பட்ட யாத்திரிகர்கள் சிலரைச் சுங்கப் பகுதியினர் கண்டுபிடித்துத் துத் திருப்பியனுப்பினர்.

### பொலிசாரிடம் ஒப்படைப்பு

நேற்று யாழ்ப்பாணத்திலிருந்து கச்சதிவுக்கு யாத்திரையை மேற்கொள்ளச் சென்ற மூதாட்டி ஒருவரின் பெட்டி ஒன்றை உடைக்க முயன்ற இளைஞர் சுங்கப்பகுதியில் தற்காலிகமாகக் கடமையில் அமர்த்தப்பட்ட இளம் பெண்கள் இருவரால் கண்டுபிடிக்கப்பட்டு பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

யாழ்ப்பாணத்தின் பல இறங்குதுறைகளிலிருந்தும் மிகக் குறைவான யாத்திரிகர்களே நேற்று முன்தினம் கச்சதீவு சென்றனர்.

வள்ளங்கள் கூடுதலாகச் சேவையில் ஈடுபட்டதால் வள்ளக்காரர்கள் பலர் முந்தியடித்துக்கொண்டு யாத்திரிகர்களை வள்ளங்களில் ஏற்றிய போதும் யாத்திரிகர்கள் பற்றாக்குறை ஏற்பட்டதும் தங்களுக்கு நஷ்டம் ஏற்படும் என்ற நிலை ஏற்பட்டு யாத்திரிகர்களை வள்ளங்களில் இருந்து இறக்கிவிட்டதையும் காணக் கூடியதாக இருந்தது.

கச்சதீவு உற்சவத்தை முன்னிட்டு சகல துறைமுகங்களுக்கும் பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டிருந்த யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திரு. எஸ். எஸ். தர்மபாலன் சகல துறைமுகங்களையும் பார்வையிட்டு யாத்திரிகர்களின் தேவைகளை உடனுக்குடன் கவனித்துவருகிறார்.

(கொ)

## 'இப்பாடசாலைகளை தரமுயர்த்துக'

(அச்சுவேலி)

அச்சுவேலி சென். திரேசா வித்தியாலயம், ஊரெழுகணேச வித்தியாசாலை ஆகியவை மகாவித்தியாலயமாகத் தரம் உயர்த்துமாறு மேற்படி பாடசாலையில் பயிலும் மாணவர்களின் பெற்றோர் கல்வி அமைச்சினைக் கோரியுள்ளார்கள்.

(நெல். நி-ஈ)

## தி.மு.க. -- இ. காங். கூட்டணி பதவிக்குவந்தால்

# தமிழகத்தில் கூட்டரசு அமையாது

### கருணாநிதி கூறுகிறார்

சென்னை, மார்ச். 9

எதிர்வரும் சட்டசபைத் தேர்தலில் தமிழ்நாட்டில் தி. மு. க-இந்திரா காங்கிரஸ் கூட்டணி ஆட்சிக்கு வந்தால் அமையவிருக்கும் அரசு கூட்டரசாங்கமாக இருக்கமாட்டாது.

இவ்வாறு தி. மு. க.தலைவர் திரு. மு. கருணாநிதி தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் சட்டசபைத்தேர்தலில் தி. மு. க. வும் இந்திரா காங்கிரசும் தனித்தனி சின்னங்களுடனும், தனித்தனி தேர்தல் அறிக்கைகளுடனுமே போட்டியிடுமென்றும் தெரிவித்த திரு. கருணாநிதி அ. தி. மு. க. விலிருந்து வெளியேறி தி. மு. க. வில் சேர்ந்துகொள்வோர் பற்றி கூறியதாவது;

அ.தி.மு.க.விலிருந்து விலகி தி. மு. க. வில் சேர விரும்புபவர்களை சேர்த்துக் கொள்வதற்கு சில நெறிமுறைகளை தி. மு. க. வின் பொதுக்குழுவும், செயற்குழுவும் வகுத்துத் தந்துள்ளது. இதன் அடிப்படையிலேயே அவர்கள் தி. மு க. வில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். (இ)

## தேர்தல் அறிவிப்புக்கு முன்

# வாக்காளர் பட்டியலை திருத்தி அமையுங்கள்

### எம். ஜி. ஆர். - நெடுஞ்செழியன் தேர்தல் ஆணையாளருக்கு கடிதம்

சென்னை, மார்ச். 9

தமிழ் நாடு சட்ட சபைத் தேர்தலுக்கான திகதியைஅறிவிக்கு முன்னர் தேர்தல் வாக்காளர் பட்டியலைத் திருத்தி அமைக்கவேண்டும்.

இவ்வாறு அ. தி. மு. க.தலைவர் திரு. எம். ஜி. இராமச்சந்திரனும், பொதுச்செயலாளர் திரு. இரா.நெடுஞ்செழியனும் இந்திய தலைமை தேர்தல் கமிஷனர் திரு. சக்தரைக் கேட்டுள்ளனர்.

இது தொடர்பாக இவர்கள் திரு. சக்தருக்குஎழுதியுள்ளகடிதத்தில், வாக்காளர் பட்டியலில் இருக்கும் குறைபாடுகளை நீக்குமாறு கடந்த காலங்களில் தாம் கேட்டிருந்தும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லையென்றும் கூறியுள்ளனர். (இ)

## ராஜ்யசபைத் தேர்தல்

### மார்ச் 28, ஏப். 7-ல் நடைபெறும்

புதுடில்லி. மார்ச். 9

2 வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறும் ராஜ்ய சபைத் தேர்தல் இம்மாதம் 28ம் திகதியும், ஏப்ரல் 7ம் திகதியும் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆந்திரா, கர்னாடகம், கேரளா, அஸாம், இமாலயப் பிரதேசம், ஜம்மு காஷ்மீர் ஆகிய மாநிலங்களிலும் டில்லி யூனியன் பிரதேசத்திலுமே ராஜ்யசபை உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் நடைபெறும். (இ)


மீண்டும் ஆரம்பமாகிறது !

ஒரு நம்பத்தகுந்த போக்குவரத்துச் சேவை
இலங்கையில் போக்குவரத்துத் துறையில் முன்னோடியான

**சிலோன் மோட்டர் ட்ரான்சிட் கொம்பனி (1955) லிமிடெட்.**

தமது போக்குவரத்துச் சேவையை 1980 மார்ச் மாதம் 17-ம் திகதி முதல் மீண்டும் ஆரம்பிக்கவுள்ளது என்பதை பெருமையுடன் அறிவிக்கின்றது.

சி. எம். டி. (C. M. T.) கடுகதியில் யாழ்ப்பாணம் / கொழும்பு யாழ்ப்பாணம் பாதையில் பகலில் தினமும் சொகுசாக, சுகமாக பயணம் செய்யுங்கள்.

**ஆசனப் பதிவு செய்யுமிடங்கள்:**

கொழும்பு - கொலட்ஸ் லிமிட்டெட்,
101, டி. எஸ். சேனநாயக்க மாவத்தை,
பொறளை, கொழும்பு—8.
தொலைபேசி; 96101 (5 லைன்)

யாழ்ப்பாணம் - யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம்
420, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 370, 438, 537

| புறப்படும் நேரம் | புறப்படும் இடம் | போய்ச்சேரும் நேரம் |
| --- | --- | --- |
| காலை 5-30 மணி | கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கெதிரில் | யாழ்ப்பாணம் 4-30 மணி மாலை |
| காலை 5-30 மணி | (1) யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச்சங்கம் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (2) கிருஷ்ண விலாஸ் ஹோட்டல்- கொடிகாமம் புகையிரத நிலயத்திற்கெதிரில் (காலை 6-45) | கொழும்பு 4-30 மணி மாலை |

பயணச் செலவு

கொழும்பு — யாழ்ப்பாணம் — ஒரு வழி — ரூபா 45/- ஒருவருக்கு
கொழும்பு — அனுராதபுரம் — ஒரு வழி — ரூபா 30/- ஒருவருக்கு

**சிலோன் மோட்டர் ட்ரான்சிட் கொம்பனி (1955) லிமிடெட்.**

(கொலட்ஸ் குழு அங்கத்தினர்)

101, டி. எஸ். சேனநாயக்க மாவத்தை, கொழும்பு—8.
தொலைபேசி: 96101 (5 லைன்)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நாகமஸ் (... ணகைம்)
தினசரி: 6- , 9-45
சனி, ஞாயிறு 2-45
M. D. ராமராவ்
பாலநாகம்மா

ஹரா (... ணம்)
தினசரி ... சிகள்
டி. ஆர். மகாலிங்கம்
அஞ்சலிதேவி
ஆடவந்த தெய்வம்
(புத்தம் புதிய பிரதி)

வின்ஸர் 2வது ஜனத்திரள் வாரம்!
(யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, பி. ப. 2-30, 6-15, இரவு 9
நாகேஷ்-முத்துராமன் சௌகார் ஜானகி
"எதிர் நீச்சல்" (புதிய பிரதி)
குறிப்பிட்ட தினங்கள் மட்டும்

REGAL JAFFNA. சில தினங்கள் மட்டும்
Phone: 360
Daily at 2-00, 4-30, 7-00 & 9-30 p.m. only
"THE FLESH AND BLOOD SHOW"
(கண்டிப்பாக ... யது வந்தவர் மட்டும்)
STRICTLY FOR ADULTS

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
சஞ்சீர் (ஹிந்தி) SANJEER

ஸிடோ (... நகர்) Daily: 10-30, 2-15, 4-45, 7-15 & 9-30
போன்: 7693
ARABIAN ADVENTURE
(Color)

SRIDHAR JAFFNA
Daily 5 Shows—10-30 a.m. 2-30, 4-45, 7-00 & 9-30 p.m.
GANG WAR, AMBUSH, BEATINGS AND MURDER
The Crime War To End ALL Crime Wars
ANTHONY QUINN in
THE DON IS DEAD
(Adults Only)
(திகிலூட்டும் சண்டைகள் நிறைந்த படம்)

ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-விஜயா-சந்திரமோஹன்
கவிதா நடித்த
ஜெனரல் சக்கரவர்த்தி
(ஈஸ்மன்ட் கலர்)

மனோஹரா A யாழ்ப்பாணம்
தினசரி: 4 காட்சிகள்
சிவாஜி ... பத்மினி
அன்புக்கரங்கள்

ராணி (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
இல்லறம் இன்பமாக விளங்க "இருவர் உள்ளம்"
இணையவேண்டிய அவசியத்தை விளக்கும்
இணையற்ற குடும்பச் சித்திரம்
சிவாஜி கணேசன்-சரோஜாதேவி-எம். ஆர். ராதா
பாலாஜி-ரங்கராவ் இன்னும் பலர் நடித்த
இருவர் உள்ளம்
(புதிய பிரதி)
திரைக்கதை வசனம்: கலைஞர் கருணாநிதி

SANTHI JAFFNA Phone: 7642
DAILY 10-30, a.m. 2-30, 4-45, 7-00 & 9-30 P.M.
முழுக்குடும்பமும் பார்த்து மகிழ வேண்டிய.
குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைக்கும் சீரிய சித்திரம்
இப்பொழுது 2-வது ஜனத்திரள் வாரம்!
Much Better than 'CRIME BUSTERS'
TERENCE HILL...BUD SPENCER — in
WATCH OUT WE'RE MAD! COLOR
EXCITING... FANTASTIC... THRILLING (Color)
SPECIAL SCHOOLS SHOWS Contact Manager

"உத்தியோக வாய்ப்புக்கள் குறைவதால்

# தமிழில்கற்பதை மாணவர் வெறுத்து வருகின்றனர்"

## பேராசிரியர் சிவத்தம்பி கவலை

(அரியாலை)

"தமிழ்மொழி மூலம் கல்வி கற்கும் மாணவர்களுக்கு இத்தியோக வாய்ப்புக்கள் குறைந்து வருவதால் அவர்கள் தமிழ் மொழிமூலம் கல்வி கற்பதை விரும்பாமல் வெறுக்கின்ற அவலநிலை இன்று தோன்றியுள்ளது. அத்துடன் திறமையுள்ள மாணவர்களும் தமிழ் மொழிமூலம் கற்றுப் பட்டதாரிகளாக வெளிவர முன்வருகிறார்களில்லை. விஞ்ஞானம், கணிதம் என்பவற்றைக் கற்கும் மாணவர்களும் தமிழ் மொழியில் போதிய கவனஞ் செலுத்தாமல்விட்டால் அவர்களின் எதிர்காலமும் இருளடைந்ததாக மாறிவிடும்"

இவ்வாறு பேராசிரியர் கா. சிவத்தம்பி யாழ். பரி. யோவான் கல்லூரி பீற்றோ ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்ற தமிழ் விழாவில் தமிழ்மன்ற மாணவர்களின் பேச்சு, கவிதை, நாடகம் என்பவற்றுக்கான விமரிசன உரையை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

மன்றத் தலைவர் செல்வன் பா. யோகன் கனகரத்தினம் தலைமையில் நடைபெற்ற தமிழ்விழாவில் பேராசிரியர் கா. சிவத்தம்பி தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

தமிழ்மொழி மூலம் கல்விப் போதனை பெறும் மாணவர்கள் அதனை வெறுக்கின்ற அவலநிலை தோன்றியுள்ள இக்காலகட்டத்தில் நாம் நமது தமிழ் மொழியிலேயே சிந்திக்கவேண்டும். இப்படியாக தாய் மொழியில் சிந்திப்பதினால் தான் நமது ஆற்றல்கள் வெளிவரும்.

"மொழியொன்று நமக்கென்று இல்லாவிட்டால் நாம் சிந்திக்கவோ, நமது கருத்துக்களை வெளிப்படுத்தவோ முடியாது, தாய்மொழியின் மூலமே சிந்திக்கவேண்டும். அப்பொழுது அச்சிந்தனையின் மூலம் நமது மனக்கருத்துக்களை வெளிப்படுத்த முடியும்.

"தங்களது மொழித்திறன் மூலம் ஏதோ ஒன்றைச்சொல்ல விரும்புகிறவர்கள் தமது உணர்வுகளை வெளிப்படுத்துகிறார்கள்.

### பல்கலைக்கழகத்தில் திறமைக்கு இடமில்லை

"பல்கலைக்கழகங்களிலும் கல்லூரிகளிலும் திறமையுள்ள மாணவர்களுக்கு இடமில்லாத அவலநிலை இன்று ஏற்பட்டுள்ளது.

மாணவர்களிடையே மறைந்திருக்கும் சகல ஆக்கத் திறமைகளையும் நாம் வளர்க்காவிட்டால் அதற்கேற்ற முறையில் கல்விப்போதனை அமையாவிட்டால் மாணவர்களின் எதிர்காலம் இருள்சூழ்ந்ததாக அமையும். அத்துடன் எமது தாய் மொழியாகிய தமிழ் மொழிக்கும் எதிர்காலமில்லாமல் போய்விடும்.

பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட முன்னாள் விரிவுரையாளர் கு. நேசையா பேசுகையில் கூறியதாவது:

'ஆங்கில சரித்திரங்களை விரும்பிப்படிக்கும் நாம் நமது சரித்திரங்களைப் படிக்க முன்வருவதில்லை. ஒரு தேசியஇனத்தின் மொழி, கலை, கலாச்சாரம் என்பன அழியாமல் பாதுகாக்கப்பட வேண்டும். எமது எதிர்காலம் எமது சரித்திரத்தில்தான் தங்கியிருக்கிறது."

நம்நாட்டில் சிறந்த தேசபக்தர்கள் தோன்றாமைக்குக் காரணம் நம்நாட்டிலுள்ள கல்விப்போதனையிலுள்ளகுறைபாடேயாகும். எமது மொழி, கலை, கலாச்சாரம் என்பவற்றை அழியாமல் பாதுகாப்பதுடன் அவற்றைப் பேணி வளர்ப்பதின்மூலமே எமது காலத்தை நாம் மீளம்டுத்த முடியும்." (கு)

## றேயல் மாணவரின் புதிய சாதனை

(கொழும்பு)

இலங்கையின் பிரபல கல்லூரிகளான றேயல் கல்லூரிக்கும், சென். தோமஸ் கல்லூரிக்குமிடையிலான 101வது வருடாந்தக் கிரிக்கெட் மோதல் வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது.

கொழும்பு சரவணமுத்து விளையாட்டு மைதானத்தில் மூன்று நாட்கள் நடைபெற்ற இம்மோதலில் முதல் இன்னிங்ஸில் றேயல் கல்லூரியைச் சேர்ந்த சுமித்ரா வர்ணகுலசூரிய 197 ஓட்டங்களைப் பெற்று புதிய சாதனை ஒன்றை நிலைநாட்டினார்.

101 ஆண்டுகளாக நடைபெற்றுவரும் இம்மோதலில் இவரே ஆகக் கூடுதலான ஓட்டங்களைப் பெற்றுள்ளார்.

இதுவரை தோமஸ் கல்லூரியைச் சேர்ந்த டியூலிப் மென்டிஸே (184) ஆகக் கூடுதல் ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

ஸ்கோர் விபரம்: றேயல்- 8-357, 3-86.

தோமஸ்- 9-211, 2-97. (இ)

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
... பயணம்

## இன்றைய பலன்

மாசி மாதம் 27ம் திகதி
10-3-1980 திங்கட்கிழமை

மேடம்: குடும்பத்தில் இடைக்காலப் பிரிவுக்குமிடமுண்டு. கடன்படவும் நேரிடலாம், தொழிலும் மந்தநிலை பெறும்.

இடபம்: குடும்பம் இன்று கலைக்கோயிலாக மாறும். டாக்டர்களுக்கு சிறப்பான தினம், பயனுள்ள தொடர்புகளும் பெருகும்.

மிதுனம்: எண்ணியதில் ஏமாற்றம் தென்படும், விவசாயிகள் நஷ்டமடைவர். விபரீதங்களும் இடம்பெறலாம் நிதானம் நன்று.

கடகம்: பெரியோர் ஆதரவுண்டு பொருள்வளத்திலும் திருப்தியுண்டு, தருமகாரியங்களிலும் ஈடுபடுவீர்கள்.

சிங்கம்: வியாபார விருத்தியுண்டு. மனமகிழ்ச்சியுண்டு, முன்னேற்றப் பாதையிலும் வீறுநடை போடுவீர்கள்.

கன்னி: இல்லத்தில் இனிமை தங்கும். இலட்சியப் பாதையிலும் வீறுநடை போடுவீர்கள், தொழில் சுகமுண்டு

துலாம்: அவசரம் வேண்டாம்: ஆயுதபீடையும் இடம்பெறலாம். நில் நிதானி அமைதிஉன் காலடியில், சுமாரான தினம்.

விருச்சிகம்: இதயத்தில் எரிமலை குமுறும். கருத்தினில் கர்வம் தோன்றும். பொறுமையைப் பேணின் நன்மையுண்டு.

தனுசு: குடும்ப சுகமும் உண்டு. பணபலமும் உண்டு குறிக்கோள் வெற்றிக்குமிடமுண்டு. சிறப்பான தினம்.

மகரம்: சகோதர சுகக் குறைவுமுண்டு சிக்கல்களால் தாக்கப்படுவீர்கள், தொழிலாலும் தொல்லையுண்டு.

கும்பம். தாய்வழிப் பெருமையுண்டு. தானிய விருத்தியுண்டு. வாகன சுகமுமுண்டு. வாழ்க்கையிலும் இனிமையுண்டு.

மீனம்: புத்திர சுகமும் உண்டு. புதுமையான எண்ணம் தோன்றும், கல்வியிலும் ஆர்வமுண்டு. களிவான தினம்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## மன்னார்ச் செய்திகள்

(மன்னார்)

மன்னார் அரசாங்க அதிபர் திரு. கமிலஸ் பெர்னாண்டோ பெரிய மடு குடியேற்றத் திட்டத்திற்கு பல்வேறு திணைக்கள தலைவர்களுடன் விஜயம் செய்தார். குடியேற்றத் திட்டத்தில் உள்ள மக்களின் குறைகளைக் கேட்டறிவதற்காகவே அவர் விஜயம் செய்தார்.

குடியேற்றத் திட்ட வீதியை நிர்மாணித்தல், மகா வித்தியாலயத்தில் விஞ்ஞான ஆய்வு கூடம் அமைத்தல், குடியேற்றத் திட்டத்தில் உள்ள தபால் நிலையத்திற்கு தொலைபேசி சேவை இணைத்தல், மருத்துவமாது ஒருவரை நியமித்தல் போன்ற பல கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்று அரசாங்க அதிபர் திரு. கமிலஸ் பெர்னாண்டோவிடம் கையளிக்கப்பட்டது.

### நெற்களஞ்சியம்

மன்னார் மாவட்டத்தில் 3 லட்சம் புசல் நெல்லைச் சேமித்து வைக்கக் கூடிய நான்கு களஞ்சியங்கள் திறுவப்படவுள்ளன.

அடம்பனில் நிர்மாணிக்கப்படும் நெற்களஞ்சியத்தில் ஒன்றரை லட்சம் புசல் நெல்லை சேமித்து வைக்க முடியும். பிரிட்டன் அரசாங்கத்தின் உதவியுடன் நிர்மாணிக்கப்படவிருக்கும் இக்களஞ்சியம் நிர்மாணிப்பதற்கான பூர்வாங்க வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன. முருங்கன், ஆட்காட்டி வெளி, பொற்கேணி ஆகிய இடங்களில் ஆஸ்திரேலிய அரசின் உதவியுடன் மூன்று நெற்களஞ்சியங்கள் நிர்மாணிப்பதற்கான் வேலைகள் நடைபெற்று வருகின்றன. இந்த மூன்று களஞ்சியங்களிலும் தலா 50ஆயிரம் புசல் நெல் சேமித்து வைக்கமுடியும்.

### ஆசிரியர் பற்றுக்குறை

வங்காலை மகாவித்தியாலயத்தில் கடமையாற்றிய 35 ஆசிரியர்களில் ஏழுபேர், ஆசிரியபயிற்சிக்கலாசாலைக்கு தெரிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து இந்த ஆசிரியர்களுக்குப் பதிலாக வேறு ஆசிரியர் எவரும் இதுவரை நியமிக்கப்படவில்லை இதனால் வங்காலை மகா வித்தியாலயத்தில் ஆசிரியர்கள் பற்றுக்குறை ஏற்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Dilka Watch Works

SPECIALIST IN WATCHREPARING

யாழ் நகரில் சகலவித மணிக்கூடுகளையும் சிறந்த முறையில் திருத்திக்கொள்ள...

தொலைபேசி 8174



டில்கா வாச் வேக்ஸ்

- பஸ் நிலைய எதிர் மேல்மாடி -

494/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.



ஈழநாடு 50 சதம்

The EELANAADU


## அதிபர் டிட்டோ நிலை கவலைக்கிடம்

(பெல்கிரேட்) யுகோஸ்லேவியா ஜனாதிபதி மார்ஷல் டிட்டோவின் உடல் நிலை மிகவும் கவலைக்கிடமாக இருப்பதாக நேற்றிரவு கடைசியாக வெளியான வைத்திய அறிக்கை அச்சம் தெரிவித்தது.

## அ. எ. வி. சங்கத்தின் முல்லைத்தீவுக் கிளை

(கொழும்பு)

அரசாங்க எழுதுவினைஞர்சங் முல்லைத்தீவு கிளை அங்குரார்ப்பணக் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணக் கச்சேரியில் நடைபெறவுள்ளது முல்லைத்தீவு எம். பி. திரு எக்ஸ் எம். செல்லத்தம்பு, அரசாங்க எழுதுவினைஞ சங்கத் தலைவர் திரு. சி. சதாசிவம், செயலாளர் திரு. க. உருத்திரன், நிதிச்செயலாளர் திரு. வி. இரத்தினவடிவேல் ஆகியோர் கலந்துகொள்வார்கள். (ம-ரு)

### பாராளுமன்றத்தில் . . . . .

# சபைக்கு வந்த சேலை விலை விவகாரம் : அரசு -- எதிர்க்கட்சி சுவையான விவாதம்

விலைவாசி ஏற்றம், வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, பணவீக்கம், அபிவிருத்தி,

கடந்தவாரப் பிற்பகுதியில்- மூன்று தினங்களாக சபையில் இவைபற்றியே முழுநேரமும் விவாதம் நடைபெற்றது. சபை முழுநேரமும் 'உற்சா'கமாகக் காணப்பட்டது.

கூச்சல்கள், கடுமையான தாக்குதல்கள், பலமான கண்டனங்கள், உள்ளிப்பான அவதானிப்புகள், துல்லியமான அமைதி, இவை அனைத்துமே மாறி மாறி நிலவிக்கொண்டிருந்தன! கூடவே மட்டக்களப்பின் 'சூறாவளியும்' மூன்று தினங்களாக வீசியது!

''பதில் நிதியமைச்சரின் திறைசேரி உண்டியல் தீர்மானம் ஒரு தற்காலிக நடவடிக்கை அது ஒரு சிறுவிடயம், செயற்கை ரீதியில் பொருட்களின் விலை எதுவும் உயர்த்தப்படவில்லை, வாழ்க்கைச் செலவு உயர்ந்துள்ள போதும் மக்களின் வருமானம் உயர்ந்துள்ளது, தன்னிறைவை நோக்கிய பாரிய அபிவிருத்தியின் பொருட்டான ஒரு சிறிது கால கஷ்டங்கள்''- இவைதான் அரசதரப்பின் பொதுவான விவாதக் கரு.

அதே நேரத்தில்- ''வாழ்க்கைச் செலவைக் குறைப்போம் என்றுகூறி ஆட்சிக்கு வந்தவர்கள் மக்கள்மீது சுமைகளை ஏற்றுகின்றார்கள், மக்களை ஏமாற்றிவிட்டார்கள், அபிவிருத்தி என்ற பெயரில் அத்தியாவசியமற்ற விடயங்களில் பணம் விரயமாகிறது. அத்தியாவசிய உணவுப் பொருட்களின் மான்யம் நிறுத்தப்பட்டு மக்கள் பட்டினி நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். கட்டுப்பாடற்ற இறக்குமதி கொள்கை நாட்டின் விவசாய கைத்தொழில் உற்பத்திகளை நிர்மூலமாக்கிவிட்டது, திறைசேரி உண்டியல்மூலம் கடன் தொகையை மேலும் அதிகரிக்கும் தீர்மானம், மேலும் மக்கள் மத்தியில் கஷ்டத்தையே ஏற்படுத்தப் போகிறது. இந்நிலைமைகளில் அரசாங்கம் அதன் பொருளாதாரக் கொள்கையை அவசியம் மீளாய்வு செய்தாக வேண்டும்'' இவ்வாறு எதிர்க்கட்சிகள் இரண்டும் கடுமையாக குற்றம் சுமத்தின.

முதல் நாள், 'பொருட்களின் விலைகளைக் குறைப்போமென்று நாம் உறுதியளிக்க மாட்டோம்' என்று தேர்தல் காலத்திலேயே ஜே. ஆர். கூறியதாக செய்தி வெளிவந்த பத்திரிகையின் 'போட்டோஸ்ராட்' பிரதியை பிரதமரிடமிருந்து பெற்றபோது திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா சாதித்த மௌனத்தின் அர்த்தம் அடுத்தநாள் தான் புரிந்தது.

அந்தச்செய்தி பிழையானது என்று பின்னர் ஜே. ஆர். அச்செய்தியை கண்டித்திருந்த பத்திரிகைச் செய்திகளையும், குறித்த அச்செய்திபற்றி ஐ. தே. க. வின் செயலாளர் பொலிசில் கொடுத்திருந்த முறைப்பாட்டையும் சபையில் சமர்ப்பித்தார் திருமதி சிறிமாவோ! அவருக்குப் பின்னால் இரண்டாவது வரிசையிலிருந்து நுவரெலிய மாவட்ட அமைச்சர் செல்வி ரேணுகா ஹேரத் பல தடவைகளில் குறுக்கிட்டுக் கொண்டிருந்தார். அவர்களிருவருக்குமிடையே மூண்ட சண்டையில் சபையில் பெரும் சிரிப்பும் எழுந்தது.

''சீத்தை புடவையின் விலை இப்போது என்ன?'' என்று கேட்டார் சிறிமாவோ.

''உங்கள் காலத்தில் சேலை ஒன்றின் விலை என்ன?'' என்று குறுக்கிட்டார் ரேணுகா.

பின்புறம் திரும்பிய சிறிமாவோ, நீங்களெல்லாம் அப்போது சேலை கட்டாமலா இருந்தீர்கள்?'' என்று கேட்டார் கடுமையாக! சபையில் பலத்த சிரிப்பொலி எழுந்தது.

வாழ்க்கைச் செலவைக் குறைப்போம் என்று உங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறிவிட்டு அதற்கு மாறான விதத்தில் செயல்படுகிறீர்கள்'' என்பது அரசுக்கெதிரான சுதந்திரக்கட்சியின் முக்கிய ஒரு குற்றச்சாட்டு.

''செயற்கை விலையேற்றத்தைக் குறைப்போம் என்றுதான் நாம் கூறினேம்'' என்பது அரசாங்க தரப்பில், குறிப்பாக பிரதமரதும் வர்த்தக அமைச்சர் லலித் அத்துலத்முதலியினதும் வாதமாகும்.

''விஞ்ஞாபனத்தை வரைந்தவர்களில் ஒருவர் என்பதால் அதை என்னல் வலியுறுத்திக் கூறமுடியும்'' என்ருர் லலித்.

விஞ்ஞாபனத்துக்கு முரணாகவே நீங்கள் செயல்படுவதால் அதை இனியும் பேணிப் பாதுகாக்காது தீயிலிட்டுவிடுவது நல்லது'' என்ருர் சுதந்திரக்கட்சியின் கொத்மலை உறுப்பினர் திரு. ஆனந்த தசநாயக்கா! [மிகுதி நாளை]

### பண்ணைகத்தில்...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

உள்ள நகைக்கடை ஒன்றில் 600 ரூபாவுக்கு விற்றதாகவும் பொலிசாரிடம் தெரிவித்தார்.

இதனை அடுத்து பண்டத்தரிப்பு நகைக்கடை உரிமையாளரை சங்கானைப் பொலிசார் நேற்று முன்தினம் விசாரணைக்காக கைது செய்தனர். (இ)


# G. C. E. (A/L)

விற்பனையாகிறது!

**நவீன கணக்கியல் கோட்பாடுகள் [A/L]**
MODERN ACCOUNTING THEORY Rs. 7-00
ஆசிரியர் K. ஜெயரட்ணம்

**விஞ்ஞானம்**
6-ம் வகுப்பு அடங்கள்-I, 1-ம் தவணை ரூ 3-00

**விஞ்ஞானம்**
6-ம் வகுப்பு அடங்கள்-II, 2-ம் தவணை ரூ. 5-25
ஆசிரியர் ஐ. ஜெகநாதன்,
(சேவைக்கால கல்வி ஆலோசகர்)

**இரசாயனவியல் வினுவிடைகள் [A L]** 23-00

**அசேதன இரசாயனம்** 11-00
ஆசிரியர் சி. தர்மலிங்கம், B. Sc (1st class)

**அளவையியல் வினுவிடைக் களஞ்சியம் [A/L]** 16-50
ஆசிரியர் சுண்டிக்குளி எஸ். எஸ். மனேகரன்

**கணக்கியல் புதுமுறைப் பரீட்சை வினுவிடை [A/L]** 12-50
ஆசிரியர் வை. சி. சிவஞானம் - M.A.

**கணிதப்பயிற்சி**
6-ம் வகுப்பு 5-90 7, 10 அச்சில்
ஆசிரியர்கள்:
வே. நடேசபிள்ளை, B. Sc. (Cey) Dip-in-Ed. (Cey)
க. சிதம்பரப்பிள்ளை, B. A. Hons. (Lond.) Dip-in-Ed. (Cey)

**THE BIO-GAS-WAY** 3-00
RICHARDS: D. KARUNAIRAJAN

**V. P. P. உண்டு**

வெளியீடு விற்பனையுரிமை:-

## பூபாலசிங்கம் புத்தகசாலை

இல: 4 A ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7631 தந்தி; ''Books''

கிடைக்குமிடங்கள்

| | | |
|---|---|---|
| யுனைற்றட்ஸ் ஸ்ரோர்ஸ் | — | பருத்தித்துறை |
| கலைக்கோட்டம் | — | மன்னர் |
| விஜயலெட்சுமி புத்தகசாலை | — | வெள்ளவத்தை |
| டாலியல் புத்தகசாலை | — | '' |
| வாணி புத்தகசாலை | — | திருகோணமலை |
| வீனஸ் புத்தக நிலையம் | — | '' |
| சக்தி நூல் நிலையம் | — | மட்டக்களப்பு |
| சிவசக்தி புத்தகசாலை | — | '' |

## மக்கினென் டிரவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட்டெட்

உங்களை

திருச்சிராப்பள்ளி, மதுரை, பம்பாய், கோலாலம்பூர், சிங்கப்பூர், பாரிஸ், லண்டன், துபாய், சவூதி அரேபியா, கனடா ஆகிய நாடுகளுக்கு அழைத்துச் செல்ல

மற்றும்

பாஸ்போட், அமெரிக்கன் டிறவலர்ஸ் செக், உலகின் எப்பகுதிக்கும் விமான டிக்கட், சுற்றுலாக்கள் ஆகிய உங்கள் தேவைகளை

கொழும்பு செல்லாமலே யாழ்ப்பாணத்தில் ஒழுங்கு செய்துகொள்ள இன்றே தொடர்பு கொள்ளுங்கள்

**மக்கினென் டிரவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட்.,**

தபால் பெட்டி இல: 92
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 8154

பயணம் உங்களது! சௌகரியமாக்குவது எங்களது!!


### மரணஅறிவித்தல்

**க. கந்தையா**

C. T. கந்தையாவின் சிரேஷ்ட புத்திரன் கந்தையா (ஆசிரியர், சென்பற்றிக்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்) காலமானர். இவர் நாகம்மாவின் அன்புக் கணவரும், இராமச்சந்திரன் (U. K) பாலகிருஷ்ணன் (தொழிற் கந்தோர்), சிவபாலன் (கலிபோர்னியா), பதுமநிதி (ஆசிரியை, மானிப்பாய் மகளிர் கல்லூரி) செல்வநிதி ஆகியோரின் தந்தையும் சட்டத்தரணி எஸ். எஸ். கந்தையாவின் சகோதரரும், டாக்டர் எஸ். ஏ. வெற்றிவேலுவின் மைத்துனரும் ஆவார். அன்னரின் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இன்று பிற்பகல் 4 மணிக்கு நல்லூர், 90 கோவில் வீதியிலுள்ள அன்னரது இல்லத்திலிருந்து செம்மணி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். 5193


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் மார்ச் மாதம் 10-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Regd. as a Newspaper under No QD/ [illegible] The Eelanaadu P. B. No.49, Telegram Eelanadu. Phone 389


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org